

50

22.04.2018

# கலைவேந்தன் பொன்விழா


50
22.04.2018

# கலைவேந்தன் கணபதி ரவீந்திரனின்
# எழுத்துத்துறையிலும் நாடகத்துறையிலும்
## 50வது ஆண்டு நிறைவுபெறும் பொன்விழாவும் பாராட்டுவிழாவும்
## 65வது ஜனன தின விழாவும்
### 22-04-2018

எழுத்தையும் கலையையும் தன்
இரு கண்ணெனக் கருதி வாழும்
கலைவேந்தன் கணபதி ரவீந்திரனே
இன்று பொன்விழாக் காணும்
உன்னை வாழ்த்துகிறோம்.
வாழ்க பல்லாண்டு பல்துறை வேந்தனே
உங்களுக்கு அகவை அறுபத்தைந்தென
எம்மால் நம்ப முடியவில்லையே நண்பா!
இன்னும் நூற்றாண்டு காலம்
இதே சிரிப்போடும் இதே புகழோடும்
இதே அன்போடும் நீண்ட ஆயுளோடும்
என்றும் சிறப்புடன் வாழ
எல்லாம் வல்ல கணபதியை வேண்டி
கணபதியை வாழ்த்துகிறோம்
வாழிய! வாழிய! வாழியவே!

இங்ஙனம்
**விழாக்குழுவினர்**


செ. கிருஸ்ணகோபால்


ரூபி யோகதாசன்


தேவா சபாபதி


சுதா பவானந்தன்


சோதி செல்லா


சோம சச்சி


ராஜ் இராசையா


றஜனி நேசன்

*Ganapathy Raveendran*

*It is a great pleasure to send you best wishes and warmest congratulations on the occasion of your sixty-fifth birthday*

*Prime Minister of Canada*
*Ottawa 2018*

THE PRIME MINISTER OF CANADA • LE PREMIER MINISTRE DU CANADA

MARKHAM



**Logan Kanapathi**
*Councillor, Ward 7*

April 10th 2018

# *GREETINGS FROM MARKHAM*

Dear Mr. Kanapathi Raveenthiran,

On behalf of Members of Council and the City of Markham, I am very pleased to extend our best wishes and greetings to you on the celebration of your 65th Birthday.

As a multi-talented person you have been played many roles in your career as a Producer, Director, Actor, Comedian, TV/Radio Host, Writer, Speaker, and a Community Volunteer. Apart from serving as a lively entertainment your Dramas and Comedy Shows are thought provoking and leave an everlasting impression with audience. As a Councillor of Markham, the most culturally diverse city in Canada, I'm proud of your efforts and contribution in enriching Tamil Culture through art.

Thank you and I wish you continued success, joy and health in all your future endeavours.

Sincerely,

Logan Kanapathi
Councillor, City of Markham

**The Corporation of the City of Markham** · 101 Town Centre Boulevard, Markham, Ontario L3R 9W3
Tel: 905.479.7748 · Fax: 905.479.7763 · e-mail: lkanapathi@markham.ca · www.markham.ca

TORONTO

# Councillor Neethan Shan

**Ward 42**, Scarborough–Rouge River

**City Hall**
100 Queen Street West, Suite B23
Toronto, Ontario M5H 2N2

**Tel:** 416-392-4078
**Fax:** 416-696-4159
**Email:** Councillor_Shan@toronto.ca



Sunday, April 22, 2018

Dear Esteemed Guests:

I am pleased to offer my warmest greetings to everyone attending the 50th anniversary of Ganapathy Ravindran's performances. Over the 50 years, not only has he performed in countless dramas but has also taken on various roles, including radio broadcaster.

Arts play a crucial part of our communities, as it contributes to making our lives colourful. Today, as he celebrates 50 years of arts, we all get the honour to celebrate with him. Today, let us celebrate the outstanding talents of Ganapathy Ravindran.

Please accept my wishes for a delightful evening.

Sincerely,

Neethan Shan
Toronto City Councillor
Ward 42 - Scarborough Rouge River

விழாக்குழு தலைவரிடமிருந்து...

# கலை வேந்தன்
# தமிழ் கலையின் உயிர் அவதாரம்!

நன்றி!
பேச்சின் நிறைவிலும் எழுத்தின் முடிவிலும் வரவேண்டிய நன்றியை
எழுத்தின் முதலாக எழுதுவது வேடிக்கையாக இருக்கலாம்.
ஆனால் இதுதான் சத்தியம்.
கணபதி ரவீந்திரன் அவர்களைப் பார்க்கின்ற போதெல்லாம்
நன்றி சொல்லவேண்டும் என்றே என்மனம் முன்மொழியும்.
இவர் தமிழ்க் கலைகளின் உயிர் அவதாரம்!



பூக்களைத் தேடி தேனீக்கள் படை எடுப்பதைப்போல்
இந்தக் கலைஞன் தோன்றும் அரங்கெல்லாம்
சனத்திரள் அலைமோதும்.
நான் கலை வேந்தனின் நண்பன் என்பதைவிட
அவரின் தீவிர ரசிகன் என்பதே உண்மை.
அதனால்தான் கலைவேந்தன் கலைப்பயணம்
50வது மைற்கல் தாண்டிச் செல்லும் வெற்றியை
நாமெல்லாம் கொண்டாடி மகிழ வேண்டும் என்ற ஆவலோடு
பாராட்டுவிழா ஏற்பாட்டில் முனைப்பாக செயல்பட்டேன்.
அதனால் விழாக் குழுவிற்கும் என்னையே
தலைமை தாங்கும்படி பணித்தார்கள்.
பொதுவாக இப்படியான பொறுப்புக்களை
நான் தவிர்த்துக் கொள்ளும் சுபாபம் உடையவன்.
இருந்தாலும் தமிழ்கலை வேந்தன்
விழாத் தலையை தாங்குதல்
தமிழுக்குச் செய்யும் தொண்டாகவே கருதி
நான் மகிழ்ச்சியோடு ஏற்றுக்கோண்டேன்.



முதியவர் குழந்தைகள் இளைஞர்கள் அனைவரையும்
தன் பேச்சாலும் நகைச்சுவையாலும் தன்வசம்
கட்டி இழுத்த மந்திரக் கலைஞன்.
பேச்சு எழுத்து நடிப்பு ஒலிஒளிபரப்பு எந்தத்துறையானாலும்
கலைவேந்தன் படையல் அமுத விருந்தாகவே இருக்கும்.
கடந்து செல்லும் ஒவ்வொரு நாளிலும்
கலைவேந்தன் பதிவுகள் கரைந்தே இருக்கும்.

புலம் பெயர்ந்த தேசத்தில் தமிழ் மொழியும் கலைகளும்
தன்நலம் குன்றி வலுவிழந்து நலிவது கண்டு
தன்னை முழுதாய் தமிழுக்காய் தந்த கலைஞனின்
அரை நூற்றாண்டு கலைப் பயணத்திற்கு
நன்றி சொல்லி தொடர்வதே
நன்றி என்ற சொல்லிற்கு வெகுமதி என்பதால்
இங்கே நன்றி முதலானது.

கணபதி ரவீந்திரன் அவர்களது கலைப்பயணம் பற்றி எழுதும்போது
முக்கியமாக முதன்மையாக எழுத வேண்டியதும் ஒன்று உண்டு.
விருந்து உபசாரங்களின்போது பாயாசம்
பந்தியின் நிறைவில்தான் வைப்பார்கள்.
அதற்கு விருந்து தித்திப்பாய் நிறைவானது என்று அர்த்தம்.
அதுபோல் அந்த முதன்மைச் செய்தியை
கடைசிப் பந்தியில் பந்தி வைக்கிறேன்.

வளரும் பயிருக்குத்தான் மழை வேண்டும்
கதிர் முற்றி அறுவடை செய்யும்போது பெய்யும் மழையும் புறக்குடத்து நீராகும்.
ஒருவர் செய்யும் நற்பணிகளை மென்மேலும் வளர வைக்க
வாழும்போதே பாராட்டு மழையில் நீராட்டி ஊக்கம் அளிப்பதே சாலச்சிறப்பானது.

கலைவேந்தன் கலைத்துறைப் பணி ஐம்பது என்பதில்
எனக்கு உடன்பாடு இல்லை.
யுகம்பல கடந்தும் தமிழர் கொண்டாடும்
தொல்காப்பியரின் தமிழ்ப்பணிபோல்.
நிகழ்காலம் எதிர்காலம் யாவும் குறளாக தந்த
வள்ளுவனுக்கு இறந்தகாலம் இல்லையே.
மூவாராயிரம் ஆண்டுகள் கடந்தும் வாழும் குறள்போல
இன்னும் 500 வருடங்களுக்கான கலைப்பணி ஆற்றியிருக்கும்.
கலைவேந்தன் ஆட்சியை வெறும் என்ற இலக்கத்திற்குள் சுருக்கிவிடுவது
எப்படி சரியான மதிப்பீடாக இருக்க முடியும்..?
செந்தமிழ் பைந்தமிழ் சங்கத்தமிழ் இன்னும்
பலநூறு பெயர்கள் தமிழுக்கு உண்டு.
ஆற்று நடைபோல் அழகு நடை நடக்கும்
கணபதிரவீந்திரன் நகைச்சுவை பேச்சில்
தமிழ் உயிர் பெற்று நடக்கும்.
கேட்கும் மனங்களுக்குள் புதுப்பிறவி எடுக்கும்.



சோலைக்கு அழகு பூக்கள்.
நல்ல தோப்பிற்கு அழகு நீள் நிரை மரங்கள்.
பொங்கும் கடலுக்கு அழகு அலைகள்.
தொங்கும் வானுக்கு அழகு நிலவு.
தாங்கும் பூமிக்கு அழகு பசும் புல்வெளிகள்.
ஓடைக்கு அழகு தாமரைகள்.
வாடைக்கு அழகு ஈரக்காற்று.
கோன்முறை காப்பது மன்னர்க்கு அழகு.
தமிழுக்கு அழகு கணபதி இரவீந்திரன் நகைச்சுவைப் பேச்சு!
அதனால் கணபதி ரவீந்திரன் தமிழ் என்று
தமிழுக்கு மற்றொரு பெயரும் உண்டு.
இது தமிழுக்கு விழா! தமிழன்பு கொண்ட உலகத்தமிழனுக்கு விழா!

கணப்பொழுதும் ஓய்வெடுக்காமல் வீசும் காற்றைப்போல்
நோயிற் சாய்ந்து உடல் நலிந்து படுக்கையில் வீழ்ந்தாலும்
தமிழ்க் கலைப்பணி ஆற்றாமல் ஒரு நாளேனும் வீணாகுமோ என்று
கலைத் தொண்டாற்றிய கலைவேந்தன் சேவைத்
திறன் கண்டு காற்றும் கை கட்டி நிற்கும்.

எங்களூர் மரஞ்செடி கொடிகளுக்கும்,
பாடும் குயில்களுக்கும், வீசும் காற்றுக்கும்,
செம்புழுதி மண்ணுக்கும் தெரிந்திருந்த
நம் தமிழ்க்கலைகளை,
கட்டடக்காடுகளுக்குள்ளும்
மேப்பிள்மரச் சோலைகளுக்குள்ளும்
விதைத்த தமிழர் உழவனே வாழ்க!
மெய்களுக்குள் மெய்கண்ட ஞானியாய்
பொய்களுக்குள் புதைந்து விடாத
பகுத்தறிவு மேதையாய்
வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்த கலைவேந்தனே!
உன்னை பாராட்டவும் இந்த வரலாற்றுப் பதிவில்
என் எழுத்துக் கோலமிடவும் கிடைத்த வாய்ப்பே
என் பிறவிப் பயன் என்று
பெரு மகிழ்ச்சி அடைகிறேன்!

புலம்பெயர்ந்த மண்ணிலே நலங்குன்றி நலிந்த
நம் தமிழ்மொழியும் கலையும்
திடங்கொண்டு எழுந்திருக்க
திரண்ட பைந்தமிழ் ஊற்றே
வாழி! வாழி என்று வாழ்த்தி அமைகிறேன்!

மன்னிக்கவும்......

முதற் பந்தியிலேயே கடைசிப் பந்தியில்
பாயாசம் வரும் என்று குறிப்பிட்டிருந்தேன்.
சாப்பாட்டு ருசியில் பாயாசத்தை மறந்துவிட்டேன்!
பந்தத்தடியை பற்றிப் பிடிக்கவில்லை என்றால்,
முல்லைக்கொடியின் பூவாசம்
புழுதியிற்புரண்ட கதையாகப்போயிருக்கும்.
சிந்தும் வியர்வை வெளியே தெரியாமல்
கல்லோடும் மண்ணோடும் மல்லுக்கட்டி
மண்ணின் மறைப்பில் வேர்கள்
தண்ணீரும் கனிப்பொருளும் தேடித்தேடி
ஊட்டம் அளிப்பதால்தான்...
மரம் வீறுகொண்டு வான் உயர வளர்கிறது.
ஒவ்வொரு மனிதனின் வெற்றிக்கு பின்னாலும்
பலர் காரணமாக அமையலாம்.
கணபதி ரவீந்திரன் அவர்களின்
இணைபிரியா தோழியாக
கலைத்தாயின் தவப்புதல்வியாக
தமிழ்க்கலைவானில் பெண் நட்சத்திரமாக ஒளிரும்
ரூபி யோகதாசன் அவர்களை
பாராட்டவில்லை என்றால்...
இதுவரை எழுதியது அத்தனையும் வீணே!
உயிர் கொடுப்பவன் கடவுள்.
ஒவ்வொரு உயிரையும் தன்வயிற்றில் சுமந்து
உலகிற்கு தருபவள் தாய்!

அதற்குமேல் உயர்வாகப் பேச
உலகில் இதுவரை எதுவும் இல்லை.

ஆனால் உலகத் தாய்களும் தெய்வங்களும்
தலைவணங்கும் ஒரு மானிடதெய்வம்
எங்கள் ரூபி யோகதாசன் அவர்கள்
தன் உயிரிற் பாதியை பிடிங்கி எடுத்து
கலைவேந்தன் வாழ உயிர் தந்தவள்.
அவரை வாழ்த்த வார்த்தை இல்லை
வணங்குகிறேன்.
நவரத்தினங்களில் எனக்கு மிகவும் பிடித்தது ரூபி
ஆனாலும் கலையரசி ரூபிக்குபின்
ரெட்ரூபியும் வெறுங்கல்லாகத்தான்
நான் காண்கிறேன்!

கலைவேந்தன் கலைராணி இருவரும்
சேமமுறவாழ வாழ்த்தி வணங்கி
நிறைவு செய்கிறேன்!

**காவலூர் எஸ். கிருஷ்ணகோபால்**
தலைவர் - இலங்கை முன்னாள் வர்த்தக சங்கம்
(கனடா)






# கணபதி இரவீந்திரன் அவர்களின் நாடகப்பயண சாதனைகள்

**திரு.** கணபதி இரவீந்திரன் அவர்கள் 22.04. 1953ல் யாழ்ப்பாணத்தில் பிறந்தார். இவர் தனது பாலர் கல்வியை, கனகரத்தினம் மகாவித்தியாலயத்தில் தொடர்ந்தார். இளமையிலே கலை நாட்டம் கொண்டிருந்த இரவீந்தரன், ஓவியம் வரைவதில் தனது திறமையை வளர்த்து வந்தார். இவரது ஓவியத்திறனுக்கு சான்றாக, யாழ்ப்பாணத்தில் 1969ம் ஆண்டு ஆறுமுகநாவலர் நூற்றாண்டு விழா கொண்டாடப்பட்டபோது, இவர் வரைந்த ஆறுமுக நாவலரின் பெரிய ஓவியம் அக்கல்லூரி முகப்பில் பல நாட்கள் வைக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. இவர், யாழ். செங்குந்தா இந்துக்கல்லூரியில் உயர் தர வகுப்பில் பயிலும்போது நடைபெற்ற ஓவியக் கண்காட்சியில், இவர் வரைந்த ஓவியம் முதலிடத்தை பெற்றுள்ளது. தொடர்ச்சியாக ஓவியத்துறையில் ஈடுபாடு கொண்ட இவர் Lions Club ஸ்தாபகர் மெல்வின் ஜோன் அவர்களின் உருவத்தை வரைகோட்டு சித்திரமாக வரைந்தார். அவ்வோவியத்தைக் கொட்டாஞ் சேனை லயன்ஸ் கழகத்திற்கு அன்பளிப்புச் செய்தார். அக்கழகத்தினர் தம் ஒன்றுகூடலில் அவ்வோவியத்தை ஏலத்திற்கு விட்டபோது, அது ரூபா 15,000க்கு விலை போனமையும் குறிப்பிடத்தக்கது.

கலைவேந்தன் எனப்போற்றப்படும் இவரது நாடகப்பிரவேசம் 15வது வயதில் இடம்பெற்றது. இவர் நடிக்கத்தொடங்கிய முதல் நாடகம் "சாம்பிராட் அசோகன்" ஆகும். அதனைத்தொடர்ந்து கோண்டாவில் திருவள்ளுவர் சனசமூக நிலைய விழாவில், அவரது நாடகம் இடம்பெற்றது. மேலும், கல்வியன்காடு உதய சூரியன் நாடக மன்றம், கலைக்குரிசில் நாடக மன்றம் என்பவற்றுடன் இணைந்து பல நாடகங்களில் நடித்துள்ளார். உயிர் கொடுத்த உத்தமன், கைதி முதலான நாடகங்களில் பங்கேற்றுள்ளார். தங்கப்பதக்கம் என்ற நாடகத்தில் பெண் வேடம் தாங்கியும் நடித்துள்ளார். இவரது நடவடி நல்லூருக்கு என்ற நகைச்சுவை நாடகம் பெருவரவேற்பைப் பெற்றமை அவரது நாடகப் பயணத்தில் முற்றிலும் புதியதொரு திருப்பத்தை ஏற்படுத்துவதாயிற்று, .

1997ல் கனடாவுக்குப் புலம்பெயர்ந்த இவர், முதன்முதலாக உதயன் பத்திரிகையின் இரண்டாவது ஆண்டு விழாவில், சுந்தரேஸ்வரனின் எழுத்தில் உருவான சிதம்பர சக்கரம் என்ற நகைச்சுவை நாடகத்தில் நடித்ததன் மூலம், நகைச்சுவை நடிகனாக தன்னை நாடக உலகுக்கு அறிமுகப்படுத்திக் கொண்டார். இவர் தொடர்ந்து ரொறன்ரோ பெரும்பா கத்தில் இயங்கும் பழைய மாணவர் சங்கங்கள், ஊர்ச்சங்கங்கள், முதியோர் மன்றங்கள் முதலான பல்வேறு மன்றங்களின் விழாக்களில், இவரது நகைச்சுவை நாடகங்கள் தொடரச்சியாக இடம்பெற்று வருகின்றன. கீதவாணி வானொலியில் இவரது கவிதைகள், நாடகங்கள் என்பன இடம்பெறலாயின. நாடகக்கலைஞர் கனகலிங்கத்துடன் இணைந்து "காஸ் ஸ்ரேசன் கனகலிங்கம்" என்ற நாடகத்தை ஒளிப்பதிவும் செய்துள்ளார். உரும்பிராய் பாடசாலைகள் சங்கத்தினரின் பொங்கல் விழாவிலே இவருக்கு கலைவேந்தன் என்ற பட்டம் வழங்கி மதிப்பு அளித்துள்ளனர். அராலி மக்கள் மன்றம் இவருக்குக் "கலைக்குரிசில்" என்ற விருது வழங்கிக் கௌரவித்துள்ளது. இவரது நாடகப் பணியின் பயனாகப் பல்வேறு மன்றங்கள் கணபதி ரவீந்திரன் அவர்களுக்கு மேலும் நகைச்சுவை திலகம், நகைச் சுவை நாயகன் என பல விருதுகள் வழங்கிக் கௌரவித்துள்ளன. அத்துடன் Techno Media இவரது 50 ஆண்டுச்சேவையைப் பாராட்டி பரிசுகளும் வழங்கியுள்ளது. இவற்றுக்கும் மேலாக 2017ல் மொன்றியல் தமிழாழி நிறுவனம் இவருக்கு வாழ்நாள் சாதனையாளர் விருது வழங்கிக் கௌரவித்தமை குறிப்பிடத்தக்கது.

நாடகப்பணியுடன், வானொலித் துறையிலும் இவர் ஈடுபடத் தொடங்கினார். தொடக்கத்தில் சி.ரி.பி.ஸி வானொலியில் "இவ்வார நேயர்" என்ற நிகழ்ச்சியிற் பங்குகொண்டு குறுநாடகம் ஒன்றை வழங்கியுள்ளார். பின்னர் கீதவாணி வானொலியின் இரண்டாவது ஒலிபரப்புச் சேவையாகக் "கதிரொளி" வானொலியை நடத்த அனுமதி பெற்று, வாரந்தோறும் இரவு 7:00 மணியிலிருந்து 12:00 மணிவரை கடந்த நான்கு ஆண்டுகளாக நேயர்களின் வரவேற்புடன் வெற்றி கரமாக நடத்திவருகின்றார். இந்த வானொலியில் நடத்திவரும் சிறுவர் நிகழ்ச்சியின் மூலம் பல நூற்றக்கணக்கான இளையோர் தமிழ்மொழியைத் தக்கவைத்துள்ளனர் என்று கூறின் மியையாகாது. திருக்குறள் மனனம் செய்தல், கதை, பாட்டு, பேச்சு என்ற பல்வேறு நிகழ்ச்சிகளின் மூலம் கதிரொளி வானொலி இளைய தலைமுறையினரை நன்னெறிப் படுத்தும் முயற்சியிலும் ஈடுபட்டுவருதல், சமூகம், பண்பாடு ஆகிய துறைகளில் இவர் கொண்டுள்ள அக்கறையை வெளிப்படுத்துவதாகும்.



கதிரொளி வானொலியில் மட்டுமன்றி ரொறன்ரோ வில் இயங்கும் அனைத்து வானொலிகளிலும் இவரது நிகழ்ச்சிகள் இடம்பெற்றுள்ளன. TVI, Tamilone, TET ஆகிய தொலைக்காட்சி நிகழ்ச்சிகளிலும் இவர் பங்கு பற்றியுள்ளார். Tamilone தொலைக்காட்சியில் எட்டு ஆண்டுகள் தொடரச்சியாக "இதுதாண்டா இம்சை" என்ற நாடகத்தொடரை நடத்திவந்துள்ளார். இவ்வாறாக ரொறன்ரோவில் மேடை நாடகங்கள், வானொலி நாடகங்கள், தொலைக்காட்சி நாடகங்கள் என சுமார் 2500 நாடகங்களுக்குமேல் நடித்துச் சாதனை புரிந்துள்ளதாக அவர் குறிப்பிடுகின்றார். நாடகப் போட்டிகளிலும் இவர் பங்குபற்றி பரிசுகளும் பெற்றுள்ளார். கனடா மிடில்பீல்ட் முதுதமிழ் மன்றம் நடத்திய நாடகப்போட்டியில் இவரது "தவிப்பு" என்ற நாடகம் முதலிடத்தையும், 1000 டொலர் பரிசையும் பெற்றுக்கொண்டது. இந்நாடகம் பலதடவைகள் மேடையேற்றப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது.

2004ம் ஆண்டிலிருந்து கலைவேந்தன் கணபதி ரவீந்திரன் அவர்களும், "நவரச தாரகை" ரூபி யோகதாசன் அவர்களும் இணைந்து பல ஆண்டுகளாக நடத்திவரும் நாடகப் பெருவிழா அனைவராலும் அறியப்பட்டதாகும். இவ்விழாவில் கலைஞர்கள், அறிஞர்கள் ஆகியோரைக் கௌரவித்து வருகின்றனர். இவரது நாடகப் பயணத்தில் 2016ம் ஆண்டு நடைபெற்ற நாடகப் பெருவிழா மிக முக்கியத்துவம் வாய்ந்தது. உடல் உறுப்புக்களைத் தானம் செய்தலின் அவசியத்தை விளக்கும் வகையிலான "Gift of Life" என்ற நாடகம் நாடகப் பெருவிழாவில் மேடையேற்றப்பட்டது. நாடகத் துறையில் அனுபவமே இல்லாத St. Micheal மருத்து வமனையில் பணிபுரியும் Dr. Jeffery S.Zaltzman, Dr. Ramesh Prasad ஆகிய இருவரையும் இந்நாடகத்திற் சிறப்புற நடிக்க வைத்தமையையும் சாதனை என்றே குறிப்பிடவேண்டும்.

இதுவரை, கதிரொளி வானொலி மூலம் இளையோர், வளர், இளம்பருவத்தினர், முதியோர் என அனைத்து வயதினரையம் கவர்ந்துகொள்ளும் வகையில் நிகழ்ச்சிகளை நடத்திவருகின்றார். கதிரொளி, உயிர்எழுத்து ஆகிய காலாண்டு இதழ்களையும் வெளியிட்டு வருகின்றார். நாடகத் துறையில் சாதனைகள் படைத்துவருகிறார். இவற்றுக்கும் மேலாக சிறந்த மனித உள்ளம் கொண்டவர் என்ற சீரிய பண்புகள் பொருந்திய எனது பி.ஏ. மாணவன் கணபதி ரவீந்திரன் அவர்கள் 65ஆவது அகவையை சிறப்புற விழாவாக கொண்டாடுகின்றார். அவர் மேன்மேலும் சமூகப் பணிகள் புரிந்து நலமான நிறைவாழ்வு பெற இறைவனை வேண்டி, அவரை வாழ்த்துகின்றேன்.

**பேராசிரியர் பாலசுந்தரம் இளையதம்பி**
பணிப்பாளர்
சுவாமி விபுலாநந்தர் தமிழியல் ஆய்வுமையம்,
கனடா.
balasundarame@Yahoo.com
21.04. 2018



# வாழ்த்துகிறோம் வாழியவே..!

கலை வேந்தன் கணபதி இரவீந்திரன் அவர்கள், தனது அறுபத்தைந்தாவது அகவையை நிறைவு செய்வது, எமக்கு மனமகிழ்ச்சியை தருகின்றது. அவர் மேலும் பல ஆண்டுகள் நலமோடு வாழ்ந்து பவள விழாக்கண்டு நூற்றாண்டு விழாவைக் கடந்து நீடூழி காலம் வாழ நாம் எமது பிறந்த நாள் நல் வாழ்த்துக்களை மனமகிழ்ச்சியோடு வழங்கி நிற்கின்றோம்.

இவர் எம் எல்லோராலும் அறியப்பட்ட ஒரு சிறந்த கலைஞராவார். தனது நகைச்சுவைப் பேச்சாலும், தனக்கேயுரிய தனித்துவம் மிக்க நடிப்பாற்றலாலும், கனடாவாழ் தமிழ்மக்கள் அனைவராலும் நன்கு அறியப் பட்ட ஒரு சிறந்த கலைஞர் இவராவார். தாயகத்தில் ஈழநாடு செய்தித்தாளின் ஊடாக தனது பதினான் காவது வயதில் கலையுலகப் பயணத்தை தொடங்கிய இவர், கனடிய மண்ணில் தொடர்ச்சியாகப் பல துறைகளில் தனது ஆற்றலை வெளிப்படுத்தி வருவது குறிப்பிடத்தக்கதாகும். தொலைக்காட்சி, கதிரொளி வானொலி, செய்தித்தாள், அரங்க நிகழ்வுகளான, நாடகம், பட்டிமன்றம், கவியரங்கம், உரைகள் எனப் பல்துறைகளில், தனது ஆளுமையைத் தொடர்ச்சியாக வெளிப்படுத்தி நிற்கும் இந்த ஈழக்கலைஞனை அருள் மிகு கனடா கந்தசுவாமி ஆலய அறங்காவல் சபையினர், முகாமையாளர்கள், அந்தணப் பெரு மக்கள், அடியவர்கள், தொண்டர்கள், அனைவரும் எமது பிறந்த நாள் நல் வாழ்த்துக்களைத் தெரிவித்து மகிழ்கின்றோம். கலைவேந்தன் கணபதி இரவீந்திரன் அவர்கள், அருள்மிகு கனடா கந்தனின் அருள் பெற்றுப்பல்லாண்டு காலம் தமிழோடு வாழ வாழ்த்துகின்றோம். வாழ்க! வாழ்க ! வாழ்க!

அருள்மிகு கனடா கந்தசுவாமி ஆலயம்.
அறங்காவல் சபையினர் அந்தணப்பெருமக்கள்.
முகாமையாளர்கள், தொண்டர்கள், அடியவர்கள்.



# கலைவேந்தன் கணபதி ரவீந்திரன்



இன்னல வேந்தன் கணபதி ரவீந்திரன்
தன்னிக ரில்லாத் தனித்துவக் கலைஞன்
ஆடுவான் பாடுவான் அழகுறப் பேசுவான்
நாடரும் நகைச்சுவை நயமுற வீசுவான்
பிறவிக் கலைஞன் பேசரும் நற்பகுத்
தறிவுக் கலைஞன் உறவுக் கலைஞன்
ஐம்பது ஆண்டுகள் ஆர்வுடன் தொடர்ந்து
தென்புடன் அரங்கினைச் சிறப்பித்த செல்வன்
நுட்பத் தத்துவன் நுடங்கா வித்தகன்
திட்பத் தீரன் வெப்பந் தணிக்கும்
கோடை மழையைப் போன்ற கோமகன்
தேடக் கிடையாத் திரவியம் ஆனவன்
ஏற்றுவோம் இவனை யானையில் ஏற்றி
போற்றுவோம் பொன்னும் பொருளும் வழங்கி
வாழி இந்த வல்லவன் வாழி
கேழிற் புகழுடன் கிறுங்கா நெஞ்சுடன்
ஊழி வரையும் உத்தமி ரூபி
தன்னுடன் கூடிச் சால்புற வாழத்
தன்னிக ரில்லா இறைவன் தாள்களை
ஏத்தி இறைஞ்சி இன்புற வாழ்கென
வாழ்த்துவன் யானே வாழிய இணைந்தே!





- வி. கந்தவனம் -



## கணபதி ரவீந்திரன் களங்கமில்லா கலைஞன் குழந்தைத்தனம், குற்றமற்ற பேச்சு

சரஸ்வதி அருள் பெற்ற கவிஞர்களும், கலைஞர்களும், அறிஞர்களும், அருளாளர்களும், குழந்தைத்தனம் நிறைந்தே காணப்படுகின்றனர். பார்ப்பதற்கு சற்று கம்பீரம் போல் தோன்றினாலும் உள்ளத்தில் ஒரு குழந்தைத்தனம் ஓடிக்கொண்டே இருக்கும். உதாரணத்திற்கு பலரை நாம் அறிவோம். உதாரணம் மகாகவி பாரதி. நிமிர்ந்த நடை, நேர் கொண்ட பார்வை, எதற்கும் அஞ்சா வாழ்க்கை முறை, ஆனாலும் மனம் குழந்தை போல் குதூகலிக்கும் உள்ளம் கொண்டவர் பாரதி. அதுபோல் ஒரு மகா கலைஞன் கணபதி ரவீந்திரன் கேட்டதும் செய்வார்(ன்). கேளாமலும் உதவி செய்வார்(ன்). எனக்கு இவரை விட பல வயது இளமை. ஆனால் கண்ட நாள் முதல் ஏக தொனியில் அழைக்கும் உரிமை கொடுத்த சகோதரன். ஒன்றாக பிறக்கா விட்டாலும் ஒரே வயிற்றில் பிறந்தவராய் எங்கள் குடும்பத்தை கொண்டாடும் இவர். இவரை கொண்டாடும் எங்கள் குடும்பம். எங்கள் தந்தையை அப்பா அப்பா என அன்போடு இவர் அழைக்க, இவரை அவர் ரவி ரவி என்று அன்பு கொண்டாட, எனது தாயாரை அம்மா அம்மா என்று இவர் அழைக்க, ரவி ரவி என எங்கள் தாயார் இவரை பிள்ளைபோல் போற்ற, குடும்பமே குதூலமாகும்.



## கணபதிப்பிள்ளை திருரவீந்திரநாதன் கணபதி ரவீந்திரன் ஆன கதை

1997ம் ஆண்டு எமது கீதவாணி வானொலி நிலையம் Kennedy Road உம் Eglinton Road உம் சந்திக்கும் சந்திப்பில், அப்பொழுது நல்லூர்க்குமரன் அமைந்திருந்த கட்டிடத்தில் அமைந்திருந்தது. ஒரு நாள் மாலை, மெல்லிய கறுத்த தோற்றமுள்ள ஒரு கலைஞனை, இலங்கை வானொலி London கந்தையா நாடகப்புகழ் கனகலிங்கம் அவர்கள் இவரை எங்களிடம் அழைத்து வந்து அறிமுகம் செய்து வைத்தார்.

இவர் தனக்கு வானொலியில் பணியாற்ற விருப்பம் கூறி தனது விண்ணப்பத்தையும் கையளித்தார். விண்ணப்பத்தை ஏற்றுக்கொண்ட எமது அலுவலகம், இவருக்கு நடத்திய நேர்முக பரீட்சையில் வெற்றி பெற்ற போது, இவரது நீண்ட பெயரை சுருக்கி, கணபதி ரவீந்திரன் என்று வானொலிக்காக மாற்றினேன். அன்று முதல் கணபதிப்பிள்ளை திரு ரவீந்திரநாதன், நேயர்கள் மத்தியில், கணபதி ரவீந்திரன் ஆக, புகழ் பெற ஆரம்பித்தார்.



## வற்றாத ஆற்றல் வளமான படைப்புக்கள்

கவிதை எழுதத்தெரிந்த ஒருவராக எனக்கு அறிமுகமான கணபதி ரவீந்திரன், காலப்போக்கில் அவரது இயல்பான நாடக படைப்புக்களால் உள்ளம் கவர்ந்த ஒரு கலைஞராக உயர்ந்தார். ஆண்டுக்காண்டு அவரது கலை பரிமாணங்கள் சிறந்து விளங்கின. தனி நடிப்பு, மேடை நாடகம், திரைப்படம், பத்திரிகை யாளர், வானொலிக்கலைஞர் என உயர்ந்தார். இவருக் காக தனிக்கூட்டம் சேர்ந்தது. கணபதி ரவீந்திரன் வருகிறார் என்றால் அரங்கமே களை கட்டியது. இவருடன் ரூபி யோகதாசன் இணைந்து படைத்த பல கலைப்படைப்புகள் மரியாதைக்குரியவை.

## கணபதி ரவீந்திரன் கலை வேந்தன் ஆனார்

தன் ஒப்பற்ற படைப்புகளை வழங்கி வரும் கணபதி ரவீந்திரன் ரசிகர்களின் ஏகோபித்த நாயகனாக மாறியபோது, அவரை இங்கு அறிமுகம் செய்த கீதவாணி வானொலியும் நேயர்களும் கொண்டாடினர். கீதவாணி வானொலியால் அவருக்கும், அவரால் கீதவாணி வானொலிக்கும் புகழ் சேர்ந்தது எனலாம்.

இந்த காலத்தில் உரும்பிராய் பாடசாலைகள் சங்கத்தினரின் பொங்கல் விழாவில் இவருக்கு “கலை வேந்தன்” என்ற கௌரவம் வழங்கியது. அன்று முதல் கணபதி ரவீந்திரன் என்ற கணபதிபிள்ளை திருரவீந்திர நாதன் கலைவேந்தன் கணபதி ரவீந்திரனானார்.

## மனோரமா ஆச்சி புகழ்ந்த மனம் கவர் கலைஞர்

உதயன் பத்திரிகை விருது விழாவில் கலந்து கொள்வதற்காக உதயன் பிரதம ஆசிரியர் திரு. லோகேந்திரலிங்கத்தின் அழைப்பினால் Toronto வந்தி ருந்த ஆச்சி மனோரமா மேடையில் இவரது நடிப்பைப் பார்த்து மகிழ்ந்தார், பாராட்டினார். பல சிறந்த கதா பாத்திரங்களில் புகழ்கொடி நாட்டியவருமான ஆச்சி மனோரமா இவரது நடிப்பை பாராட்டியபோது எமக்கு பெருமையாக இருந்தது. தற்போது ஏற்பட்டுள்ள நகைச் சுவை நடிகர்களின் பற்றாக்குறை போக்க தமிழக திரைப்படங்களில் வந்து நடிக்க வேண்டும் என, வேண்டு கோள் விடுத்தது ஞாபகம் இருக்கிறது. 1000 படங்கள் கண்ட அற்புதமான நடிகை ஆச்சி மனோரமா மனம் கவர்ந்த கலை வேந்தன் கணபதி ரவீந்திரனின் திறமை போற்றுதலுக்குரியது.

### வாழ்க பல்லாண்டு வாழ்க வளமுடன்..!

இந்த ஆண்டு தனது கலைத்துறையில் 50வது பொன்விழா ஆண்டை கொண்டாடும் எங்கள் அன்புக்குரிய ரவியின் கலைத்தொண்டு இன்னும் பல ஆண்டுகள் சிறப்பாக, பெருமையோடு, புகழோடு தொடரவேண்டு மென வாழ்த்துவதில் மகிழ்ச்சியடைகின்றோம்.

அன்புடன்,

**நடா ராஜ்குமார் குடும்பத்தினர்**

## எஸ். குருபாதம்

### தமிழக அரசின் பரிசு பெற்ற நூல் ஆசிரியர்

கீதவாணி வானொலியில் "இயற்கையும் இயல்பும்" நிகழ்ச்சி ஒருங்கிணைப்பாளர்

கலை உலகினில் கால் பதித்து பொன் விழாக்காணும்

கணபதி இரவீந்திரன் அவர்களின் பிறந்த தினத்தில் வாழ்த்தி

இம்மடலை வரைகின்றேன்

கலைப்பயணமும் எழுத்துப் பயணமும் சமாந்தரமாகப் பயணிக்கும் தனிச்சிறப்பும், பேச ஆரம்பித்தால் மனஉழைச்சலை விரட்டும் நகைச்சுவையும், காட்டாறு போல் பாயும் சுவாரசியமான வசனங்களும், சமூக நிகழ்வுகளில் கலந்து கொள்ளும் பண்பும், கணபதி இரவீந்திரனின் தனித்துவங்களாகும். இவருக்குள் மறைந்திருக்கும் ஓவியக்கலை மகிழ்வூட்டும் சித்திரங்களாக வெளிவந்து காட்சிப்படுத்தப்பட வேண்டும். இவரை அறியாது இவருக்குள் சிறைப்பட்டிருக்கும் ஆன்மீகப்பேச்சு விடுதலை பெற்று சிறகடித்துப்பறந்து மக்களை வட்டமிட வேண்டும் என வேண்டுகின்றேன்.

இப்பிரபஞ்சம் தன்கலைநய விருப்பத்தை இவர்மூலம் நிறைவு செய்கின்றதோ என ஐயுற வைக்கிறது. மக்களுக்காக, மக்கள் கலைஞர் இரவியை நீண்ட ஆயுளுடன் வாழ்ந்து கலைப்பயணம் மேன்மேலும் தொடர வாழ்த்துகின்றேன்.

04.04.2018

யாதும் ஊரே யாவரும் கேளிர்

மனித நேயத்துடன் வணக்கம்





## கலைவேந்தன் கணபதி ரவீந்திரன்

கலை உலகின் வேந்தன் கணபதி ரவீந்திரனுக்கு
அகவையோ அறுபத்தி ஐந்து.
கலை உலகில் காலடி பதித்த சேவையின்
அகவையோ ஐம்பது.
கனடிய மண்ணின்
கலைக் காவலனாய் வாழவேண்டும்
நீடூழி என மனதார வாழ்த்துகின்றேன்!

குரு அரவிந்தன்
Kuru Aravinthan
Canadian Asian Tamil Stars
22 - 04 - 2018







# அக்காவின் ஆசியுரை

எனது தம்பி கணபதி ரவீந்திரனொரு பிறவிக் கலைஞன். மிகச்சிறிய வயதிலிருந்தே கலை ஆர்வம் மிக்கவராக இருந்தார். தனது மூன்றாவது வயதில் ஒரு அணில் பழம் சாப்பிடுவது போல் படம் வரைந்து எங்களை ஆச்சரியத்தில் ஆழ்த்தினார். சிறுவயதில் இருந்தே இவருடைய நகைச்சுவை கலந்த பேச்சைக்கேட்க எப்போதும் இவரைச் சுற்றிப் பலர் இருப்பார்கள். ஒருமுறை யாழில் இருந்து கொழும்பு செல்லும் புகையிரதத்தில் இவருடன் முதியவர் ஒருவரும் பயணம் செய்துகொண்டிருந்தார். அந்த முதியவருக்கு இவரைப்பற்றி அறிய ஆர்வம் ஏற்பட்டது. அதனால் இவரிடம் பல கேள்விகளைக் கேட்டபடியிருந்தார். இவரும் சலிக்காமல் எல்லாவற்றிற்கும் ஓம் ஓம் என்று பதில் அளித்தபடி வந்தார். சிறிது நேரத்தில் முதியவர் பொறுமை இழந்து "என்ன தம்பி எதைக்கேட்டாலும் ஓம் ஓம் என்று பதில் சொல்லுகிறீர்?" என்று கேட்டார். அதற்கு ரவி "ஐயா மன்னிக்கவேண்டும். நீங்கள் விரும்பினால் ஒன்றுவிட்ட ஒரு கேள்விக்கு இல்லை என்று பதில் சொல்லவா?" என்று கேட்டார். நான் உட்பட அந்தப் பெட்டியில் இருந்த அனைவருமே சிரித்துவிட்டோம். இன்னுமொருநாள் இவர் கொழும்பில் இருந்து யாழ் சென்றபோது யாழ் புகையிரதநிலையத்தில் நின்ற ஒருவர் "தம்பி கொழும்பில மழை எப்பிடி?" என்றார். அதற்கு இவர் சற்றும் தயங்காமல் "அங்கயும் மழை தண்ணி தண்ணியாத்தான் பெய்யுது" என்றார். நகைச் சுவை இவரோடு கூடப்பிறந்த குணம்.

சிறுவயதில் இருந்தே எழுத்தாளராகவும் பேச்சாளராகவும் நடிகராகவும் கவிஞராகவும் ஓவியராகவும் இன்னும் பல துறைகளிலும் சிறந்து விளங்கினார். 1968ல் தனது பதினாறாவது வயதில் கொக்குவில் தொழில்நுட்ப கல்லூரியில் நடைபெற்ற முத்தமிழ் விழாவில் இவர் எழுதிய "தூது" என்ற கவிதையும், "அலைகடல்" என்ற சிறுகதையும் முதலாம் இடங்களைப்பெற்றன. இதுவே இவரது கவிதை சிறு கதைகளின் ஆரம்பமாக இருந்தது. இவர் தனது பதினைந்தாவது வயதில் ஈழநாடு பத்திரிகையில் நிருபராக இணைந்துகொண்டார். இன்று எழுத்துலகில் இவர் ஐம்பதாவது ஆண்டை நிறைவுசெயகிறார் என்று எண்ணுகின்றபோது மனம் பெருமகிழ்வு கொள்கிறது.



1998ம் ஆண்டு கனடாவில் "ஓட்டை" என்ற நாடகத்தில் ஒரு சிறிய பாத்திரத்தில் நடித்திருந்தார். உதயன் பத்திரிகையின் இரண்டாவது ஆண்டுவிழாவில் ஒரு பத்து நிமிடங்கள் "சிதம்பரசக்கரம்" என்ற நகைச் சுவை நாடகத்தில் நடித்ததன் மூலம் தான் ஒரு சிறந்த நடிகன் என்பதை வெளிச்சம் போட்டுக்காட்டி இருந்தார். ஆரம்பநாட்களில் இவர் நாடகங்களில் பெண் வேடங்கள் போட்டு நடிப்பார். உதாரணமாக "தங்கப் பதக்கம்" என்ற நாடகத்திலும் "உயிர் கொடுத்த உத்தமன்" நாடகத்திலும் பெண் வேடம் போட்டு நடித்



ததைக் குறிப்பிடலாம். ஒரு சுவையான சம்பவம் என் நினைவுக்கு வருகிறது. ஒரு முறை இவர் நாடகத்தி ற்காக பெண் வேடமிட்டு படம் பிடிப்பதற்காக யாழ். சுப்பிரமணியம் பூங்காவிற்கு சென்றபோது அங்கி ருந்த இளைஞர்கள் சிலர் இவரைப் பின் தொடர்ந் தார்கள் பின்னர் இவர்கள் யாழ்ப்பாணம் சிற்றி பேக் கரிக்கு சென்றபோது அங்கும் சென்ற இளைஞர்கள் இவரது இருக்கைக்கு முன்னாள் போய் இருந் தார்களாம் அப்போது மேக்கப் மென் ஆக இருந்த வேலும்மயிலும் என்பவர், "தம்பி சொண்டில படாமல் குடியும் உதட்டுச்சாயம் அழிஞ்சு போம்" என்றவுடன் அங்கிருந்த இளைஞர்களைக் காணவில்லையாம்.

கணபதிப்பிள்ளை திருரவீந்திரநாதனாக கனடா சென்ற இவர் "கணபதி ரவீந்திரனாகி" வானொலி நாடகங்கள், மேடை நாடகங்கள், தொலைக்காட்சி நாடகங்கள் என 2500 மேற்பட்ட நாடகங்களை நடித்து சாதனை நிலைநாட்டியுள்ளார். கீதவாணி என்னும் வானொலியில் பதினேழு ஆண்டுகள் பணியாற்றி தற்போது 2014ம் ஆண்டில் இருந்து ரூபி.யோக தாசனுடன் இணைந்து "கதிரொளி" என்னும் வானொலியை கடந்த நான்காண்டுகளாக வெற்றிகரமாக நடத்தி வருகின்றார். சிறந்த வானொலி அறிவிப்பாள ராக, நிகழ்ச்சித்தொகுப்பாளராக, நேர்முக வர்ணனை யாளராக திகழ்கின்றார். வானொலித் துறையில் இவரது இன்னுமொரு சாதனை கடந்த இருபது ஆண்டுகளாக வல்மொறின் சிவா சுப்பிரமணிய ஐயப்பன் ஆலயத்தேர் திருவிழாவை கீதவாணி வானொலியில் நேர்முகவர்ணனை செய்திருக்கிறார். இவர் எல்லோருடனும் அன்பாகவும் பண்பாகவும் பழகக் கூடியவர். எத்தனை திறமைகள் இருந்தாலும் மிகவும் அடக்கமாகவும் பணிவாகவும் நடந்து கொண் டதைப் பார்த்து நான் வியப்படைந்ததுண்டு. கள்ளம் கபடமற்ற ஒரு குழந்தையைப்போல பழகக்கூடியவர். எத்தனை வேதனைகள் துன்பங்கள் சூழ்ந்தபோதும் அவற்றை அமைதியாகக் கடந்து செல்லும் அறிவு பெற்றவர். இன்பம் என்று எகிறிப் பாய்வதோ துன்பம் என்று துவண்டு விடுவதோ இல்லாமல் எல்லாவற்றையும் சமமாகப் பார்த்து வாழும் சுபாவம் கொண்டவர்.

இவர் எனது உடன் பிறப்பாகக் கிடைத்ததை நான் பெரும் பாக்கியமாகவே கருதுகிறேன். இவர் இன்னும் பல்லாண்டு சீரும் சிறப்புமாக வாழ வாழ்த்துகிறேன்.

உடன்பிறப்பு

**சாரதா கணபதிப்பிள்ளை**



# கலைவேந்தன் காண்கின்றார் களிப்பொடு பொன்விழா!
# கணபதி ரவீந்திரனுக்கு அகவை அறுபத்தைந்து!



கலையின் சிகரமே கணபதி ரவீந்திரா
அலையெனத் தமிழினை அள்ளியே வாரிடும்
விலையிட முடியா விகட கவிஞனே
நிலைத்துநீ நெஞ்சினில் நீடு வாழி!

ஏறிய மேடைகள் எத்தனை கலைஞனே
கூறிய நகைச்சுவை குடலும் குலுங்குமே!
மாறிய வேடத்தில் மரணமும் கண்டவா
நூறினைக் கடந்தும் நலத்தொடு வாழி!

இயந்திர மயமாய் இரவு பகலென
இயங்கிடும் நடிகனே இன்தமிழ் நாவலா
கயமுக னருளொடு கன்னித் தமிழ்போல்
உயர்ந்துநீ வாழி உலகம் வாழ்த்தவே!

தேடிய சொந்தம் தென்றலாய்ச் சூழ
பாடியும் ஆடியும் பல்கலை வித்தகா
நாடிடும் நட்பெலாம் நன்குனை வாழ்த்தவே
ஈடிலா மகிழ்வொடு இன்பமாய் வாழி!

நகைச்சுவை பொழிவால் நம்மை மயக்கிடும்
பகைமை காணாப் பல்சுவை வித்தகா!
தகைமை யறிவும் தக்கபட் டறிவும்
வகையாய் மலருமே வள்ளலே வாழி!

என உள்ளன்பொடு ஸ்ரீ வரசித்தியான் பாதம் பணிந்து
வாழ்த்தினோம் பாக்கியங்கள் பதினாறொடு
மண்ணும் விண்ணும் மகிழ்ந்து போற்றிட

வாழி பல்லாண்டு!

**அருட்கவி**
**தம்பிஐயா ஞானகணேசன்**
**தலைவர்**
**கனடா தமிழ்க்கவிஞர் கழகம்**

இலங்கைத் திருநாட்டின் யாழ்ப்பாண மண்ணில் பிறந்த அருமைச் சகோதரன் கணபதி ரவீந்திரன் கலைத்துறையில் ஐந்து சகாப்தங்களைக் கடந்து பொன்விழாக்காணும் இவ்வேளையில் அவரது நண்பர்கள் கூடி அவருக்குப் பொன்விழா எடுப்பது அவரது அன்பையும் அரவணைப்பையும் கட்டியம் கூறிநிற்கிறது. அவருடன் நான் பழகிய காலங்களில் மிகப்பிடித்த விடயமாக எனது மனதைத் தொட்ட விடையம் எந்தவொரு கலைஞனையும் எப்போதும் ஊக்கிவிப்பதும் உயர்த்திப்பேசுவதும் தட்டிக்கொடுத்து முன்னேற்றி விடுவதுவும் இவரது பண்புகளில் சிறப்பாகும். தன்னைவிட யாரும் வளர்ந்துவிடக் கூடாது என்று நினைக்கும் பலருக்கு மத்தியில் இவரது பண்பு என்னை மிகவும் வியக்க வைக்கிறது. இவரின் கலைவேந்தன் கணபதிரவீந்திரன் என்ற பெயருக்கு ஏற்ப பல கலைகளையும் இவர் தன்னகத்தே வைத்திருப்பது மிகப் பொருத்தமானதே.

கவிச்சரம் என்ற நிகழ்ச்சியின் ஊடாக கீதவாணியுடன் இணைந்துகொண்ட இவர் பின் எங்கள் குடும்பத்தில் ஒருவராக மாறிவிட்டார். பொன்விழா காண்பது என்பது எல்லோருக்கும் இலகுவாக கிடைத்து விடும் ஒன்று அல்ல. ஆனால் இவருக்கு கிடைத்தது இறைவனின் அருட்கடாட்சமும் இவர் கலைமீது கொண்ட பற்றும்தான் என்று கூறவேண்டும். இவர் போன்ற கலைஞ்சர்கள் வாழும் போதே வாழ்த்தப் படவேண்டியவர்கள். இவர் இன்னும் பல ஆண்டுகள் பல கலைத்துறைகளிலும் மென்மேலும் வளர சகல கடாட்ஷங்களையும் அள்ளி நீண்ட ஆயுளும் சகல செல்வங்களும் பெற்று வளமாக வாழ எனது குடும்ப த்தின் சார்பில் வாழ்த்துக்களை தெரிவிப்பதில் மிகவும் மகிழ்ச்சி அடைகிறேன். சுபம்.









## கலைவேந்தனும் நானும் - 20 ஆண்டுகால நட்புடன்கூடிய கலைப்பயணம் ...



குணா குணசேகரன்

**கலையுலகிலும் எழுத்துலகிலும்** கடந்த 50 ஆண்டுகாலமாகத் தனது முத்திரையைப் பதித்து, கனடாவாழ் ஈழத்தமிழ் மக்களின் இதயங்களில் நீங்காத இடம்பெற்று நிலைத்திருக்கும் எங்கள் பெருமதிப்பிற்குரிய கலைஞன், கலை வேந்தன் கணபதி இரவீந்திரன் அவர்கள், தனது கலை, சமூக, மற்றும் எழுத்துச் சேவையில் பொன்விழா காணும் பெருமைக்குரிய இந்த அற்புத நன்நாளில், அவரது கலைச்சேவை பற்றி அவருடன் சேர்ந்து சிறிது காலம் கலைப்பயணம் செய்தவன் என்ற முறையிலும் 20 ஆண்டுகால நண்பன் என்ற முறையிலும் ஒருசில கருத்துக்களை இம்மலரில் பதிவு செய்வதில் பேரானந்தம் அடைகின்றேன்.

1998ல் அரும்பான எங்கள் நட்பு கடந்த 20 வருடங்களாகத் தொடரும் வரம் ஈந்தமைக்கும் - ஒரு உன்னதமான ஈழத்தமிழ்க் கலைஞனை நண்பராகத் தந்தமைக்காகவும் எல்லாம் வல்ல எங்கள் கலைத்தாய்க்கு என் முதல் நன்றி.

1998ம் ஆண்டு "திருமலை மாலை " எனும் திருகோணமலைவாழ் மக்களின் ஒன்றுகூடல் நிகழ்வொன்றில் அரங்கேறிய "சிதம்பர சக்கரம் " எனும் நகைச்சுவை நாடகத்தில் அதி அற்புதமாகவும் மிகவும் யதார்த்தமாகவும் நடித்திருந்த ..அல்ல ...அந்தக் கதாபாத்திரமாகவே வாழ்த்திருந்த ...அந்த நடிகனை முதன் முதலில் கண்டு, ஒரு ரசிகனாகப் பெருமை கொண்டேன். அந்த நிகழ்வின் முடிவில் சென்று அவரைப் பார்த்துப் பாராட்டி, என்னையும் அறிமுகம் செய்துகொள்ளும் பாக்கியம் பெற்றேன்.

அன்று தொடங்கிய எங்கள் அறிமுகம், பின்னர் 2001ம் ஆண்டு வோட்டர்லூ நகர் வாழும் தமிழர்களின் முதல் கலை நிகழ்வான "தமிழ் மாலைப் பொழுது" என்ற நிகழ்வில் "சிதம்பர சக்கரம் " எனும் காலை வேந்தனின் நாடகத்தை மீண்டும் அரங்கேற்றும் அடுத்த படிக்குச் சென்றது. அன்றுமுதல் இன்றுவரை வோட்டர்லூ மற்றும் குவல்ப் வடடாரத்தில் வாழும் தமிழ் மக்களின் மனங்களிலும் நீங்காத இடத்தில் எங்கள் கலைவேந்தன் வீற்றிருக்கின்றார் என்பது கதையல்ல நிதர்சனம்.

அன்றிலிருந்து இன்றுவரை எமது வோட்டர்லூ மற்றும் குவல்ப் வட்டாரத் தமிழ் மக்களின் கலை நிகழ்வுகளிலும் சரி விசேட ஒன்றுகூடல்களிலும் சரி எமது கலை வேந்தனை அழைத்து அவரது கலைப்படைப்பை கண்டு மகிழத் தவறியதே இல்லை என்பேன். ஒரு கலைப் படைப்பை, அதைப் படைக்கும் கலைஞனுக்காகவோ அன்றி அந்தக் கலைக்காகவோ பார்ப்பதென்பது வெறும் வெளிவேடமே என்பேன். மாறாக, உணர்வுள்ள கலைஞனால் படைக்கப்படும் உயிரோட்டமான கலைகளை இரசிப்பதே உண்மையான இரசனை என்பேன். அவ்வாறான சிறந்த கலைஞர்களில் கலை வேந்தனும் ஒருவர் என்பதை ஒரு ஈழத் தமிழனாக நான் இறுமாந்து கூறுவேன்.

நகைச்சுவை எனும் மனித மனங்களை மகிழ்விக்கும் உன்னத வரம் பெற்ற பல உலகக் கலைஞர்களை நேரில் பார்த்தும் அவர்களைப்பற்றி வாசித்து அறிந்தும் உள்ளேன். அதிலும் குறிப்பாக எமது ஈழத்துக் கலைஞர்களான கே.ஸ். பாலச்சந்திரன், டிங்கிரி -சிவகுரு இரட்டயர்கள் , ராமதாஸ் , செல்வசேகரன், ராஜகோபால் போன்றவர்களைக் குறிப்பிடலாம். இவர்களுக்கு இணையாக அல்லது சற்றே அதிகமாகத்

தனது திறமையை வளர்த்து, கனடா வாழ் ஈழத்தமிழர்களால் அங்கீகரிக்கப்பட்ட ஒரு சில மக்கள் கலைஞர்களில் காலை வேந்தனும் ஒருவர் என்று கூறுவதில் உள்ளார்ந்த உவகை கொள்கின்றேன்.

கனேடியத் திருநாட்டில், கலை வேந்தனால் எழுதப்பட்டு, தயாரிக்கப்பட்டு, நெறியாள்கை செய்யப்பட்டு , நடிக்கப்பட்டு, "நாடகப் பெருவிழா " என்ற அவரது வருடாந்த நிகழ்விலும், மற்றும் பல்வேறு சமூக நிகழ்வுகளிலும் மேடையேறிய இவரது நூற்றுக்கணக்கான, சமூக சிந்தனையோடு கூடிய நகைச்சுவை மற்றும் குணச்சித்திர நாடகங்களில் "கவரிமான்" எனும் நாடகம் உட்பட மூன்று நாடகங்களில் கலை வேந்தனுடன் சேர்ந்து நடிக்கும் அரிய வாய்ப்பு எனக்கும் கிட்டியதை எனது வாழ்நாளின் பெரும்பேறு என்பேன்.

கீதாவாணி , கனேடியத் தமிழ் வானொலி உட்பட்ட கனடாவின் பல தமிழ் வானொலிகளில் கலை வேந்தன் கணபதி இரவீந்திரன் நடாத்தும் நிகழ்ச்சிகள் மிகவும் பாராட்டுக்குரியவை. தன் இனம் , தன் மொழி , தனது தாய் மண் சார்ந்த உயரிய உன்னத விடயங்களை மக்களின் மனதில் உறுதியாகப் பதியும்படி நகைச்சுவை உணர்வுடன் சேர்த்து ஊட்டுவதில் வேந்தனுக்கு நிகர் வேந்தனே என்பேன். தமிழ் வானொலிகளில் இவரால் நடாத்தப்படும் சிறுவர் நிகழ்ச்சிகள் மூலம் கனடாவாழ் ஈழத்தமிழ்ச் சிறுவர்களின் இலைமறை காய்களான திறமைகளை வெளிக்கொணர்வதில் இவர் ஆற்றிய அட்புதமான பணிக்கு என் இதயம் நிறை பாராட்டுக்குக்கள்.

இதுமட்டுமல்லாது, இவரது கவியாற்றலும் எழுத்தாற்றலும் சாதாரண மனிதனைக் கூடச் சிந்திக்கத் தூண்டும் விதத்தில் உயிரோடடமாக அமைந்திருக்கும் என்றால் அது புகழ்ச்சியல்ல. எனக்குள்ளும் எங்கோ ஒரு மூலையில் கவித்திறனும் எழுத்துத் திறனும் ஒரு துளியாவது உள்ளதை எனக்குத் தன் உணர்வுள்ள கவிதைகள்மூலம் உணர்த்திய ஒரு உயிரோட்டமான எழுத்துக்களின் உரிமையாளன் கலை வேந்தன்.

எனது பார்வையில், கணபதி இரவீந்திரன் என்ற கலைத்தாயின் ஈழத்துக் கலைமகன், வித்யா கர்வம் அறவே அற்ற ஒரு யதார்த்தக் கலைஞன். இக்கலைஞன் ஆயிரக்கணக்கில் இரசிகர்களைக் கண்டபோதும் அசந்ததும் இல்லை , ஐந்தாறு இரசிகர்களே என்று சோர்வதும் இல்லை. இவரது கலைப்படைப்புகள் உண்மையான உணர்வுள்ள இரசனையுள்ள இரசிர்களுக்காக மாட்டுமே படைக்கப்படுபவை.



கலைகளின் வேந்தனே கணபதி இரவீந்திரனே !

நீ

கலைகளுக்கு மட்டும் வேந்தனல்ல - என்போன்ற
உன் கலைகளை உணரும் ஒவ்வொரு இரசிகனின் மனதிலும்
நீ என்றென்றும் வேந்தனே !

உன்போன்ற உன்னதக் கலைஞர்கள் வாழும்வரை - நம்
உயர் கலைகளும் உயிருடனும் உயிர்ப்புடனும்
உயர்வுபெறும் என்பது உறுதி.

எம்மினத்தின் உன்னதக் கலைகள் இவ்வுலகில் வாழும்வரை
ஈழமக்களின் மனங்களில் என்றும் நீ
கலைகளின் வேந்தனாய் வீற்றிருப்பாய் கணபதியே !

நம் இனம் வாழ , மொழி வாழ , கலைகள் வாழ ,
நம் அன்னை மண் உயர்வுபெற - என்றும்
உன்போன்ற உணர்வுள்ள உன்னதர்கள் வாழவேண்டும் !

கலைஞனே!, சிற்பியே!, கவிஞனே! - நம்
இனத்தின், மொழியின், கலைகளின் காவலனே!
நன் வாழும்வரை என் நண்பனே !

இன்னும் பல்லாண்டு காலம்
உன் கலைச்சேவை தொடர்ந்து
வளமாக நலமாக மகிழ்வாக - என்றும்
நிறைவாக வாழ்கவென்று
வாழ்த்திநிற்கும்

என்றென்றும் உன் இரசிகன் - நண்பன்

குணா குணசேகரன்

Waterloo, Ontario- Canada





கனடா ரொறன்ரோவில் பத்திரிகை, வானொலி, தொலைக்காட்சி என அனைத்து ஊடகங்கள் மூலமாகவும் பல மேடை நிகழ்வுகள் மூலமாகவும் எழுத்துலகிலும், கலையுலகிலும் தனக்கென ஓர் தனியிடத்தை நிரந்தரமாய் அமைத்து, தேமதுரத்தமிழ் உலகெங்கும் நிலைக்க வேண்டும் என்பதை தன் உயிர்மூச்சாகவும், தாரக மந்திரமாகவும் உறுதியாகப் பற்றி தமிழ்ப்பணி, கலைப்பணி இரண்டையும் இரு கண்களாகப் போற்றி அரும்பணியாற்றுவதுடன் சமூகத்துக்கு நல்ல கருத்துக்களையும் தன் நகைச்சுவை நாடகங்கள் மூலம் உரக்க, உறைக்க எடுத்தியம்பி வரும் கலைவேந்தன் கணபதி ரவீந்திரன் அவர்களின் எழுத்துலக, கலையுலக 50வது பொன்விழாவில் அவரது தமிழ், கலைப்பணி தொடர்ந்து சிறப்புற வாழ்த்தி, நலமுடனும் வளமுடனும் மேன்மைமிகு நல்வாழ்வு வாழ ரொறன்ரோ ஸ்ரீ வரசித்தி விநாயகர் திருவருளுடன் இன்று அவரது 65வது பிறந்த தினத்தில் வாழ்த்தி மகிழ்கின்றேன்.

சிவாச்சார்ய கலாநிதி
சிவாச்சார்ய குலபூஷணம்
சிவஸ்ரீ. பஞ்சாட்சர விஜயகுமாரக்குருக்கள்
ரொறன்ரோ ஸ்ரீ வரசித்தி விநாயகர்
ஆலய ஸ்தாபகர் முதல்வர் பிரதமகுரு







# உள்ளத்தில் தயக்கம் உடலில் சோர்வு எதுவுமின்றி எப்போதும் துலங்கும்

# கலை வேந்தன் கணபதி ரவீந்திரன்



**நம்** வீட்டு முற்றத்தில் மல்லிகை மலர்கள் கொட்டிக்கிடப்பதை நாம் தினமும் பார்ப்போம். ஆனால் அவை மீது நமக்கு ஈர்ப்பு எதுவும் ஏற்படுவதில்லை. அதற்காக அம்மல்லிகைகளுக்கு மணமில்லை என்று அர்த்தமாகி விடுமா என்ன? அந்த மலர்களுக்கு அருகில் சென்று அவற்றின் மணத்தை நுகராமல் அடுத்த வீட்டுத்தோட்டத்தின் மல்லிகை மலர்களையோ அன்றி ரோஜா மலர்களையோ நாம் நாடிச்செல்கின்றோம். இதுதான் இம் இயல்பான குணமாக எம்மோடு சேர்ந்து பயணிக்கின்றது.

இவ்வாறான எமது அலட்சியப்போக்குகளால் விரயமாகின்றவை எமது தோட்டத்து மலர்கள் மட்டுமல்ல, ஏனைய பல முக்கியமான மனிதர்களும் அதற்குள் அடங்குகின்றார்கள் என்பதை நாம் புரிந்து கொள்ளத் தவறிவிடுகின்றோம். பூவாகி அன்றைய தினமோ அன்றி அடுத்தநாளோ வாடிப்போவதால் குப்பையில் வீசப்படுகின்றன. மணம் தரும் மலர்கள். மலர்களுக்கே இந்த நிலையென்றால் மனிதர்கள் மத்தியில் மல்லிகைகளாக உருவாகின்ற மணம் வீசும் எமது கலைஞர்களின் ஆற்றலை நாம் நுகராமல் இருப்பது எவ்வளது பாதகான செயல் என்பதை நாம் அறியாமல் இருப்பது தவறேயாகும்.

கனடா வாழ் கலைஞர் கணபதி இரவீந்திரன் அவர்களின் கலை மற்றும் இலக்கிய பங்களிப்புக்களின் ஐம்பதாவது ஆண்டு பூர்த்தியைக் கொண்டாடும் முகமாக அவரது நண்பர் சேர்ந்து எடுக்கும் விழா தொடர்பாக மனதில் எண்ணிக்கொண்டபோது, ஒரு பக்கத்தில் அவர் மீது இயல்பாகவே உள்ள ஆர்வம் இன்னும் அதிகரித்ததால்ரூபவ் கொம்பியூட்டர் முன்னால் அமர்ந்து இந்தப் பக்கத்தை எழுதிக் கொண்டிருந்தபோது, நான் மேலே குறிப்பிட்ட மல்லிகை மலர்களின் மணம் பற்றிய கவலை என்னை வாட்டியது. ஆனால் மறுபக்கத்தில் கலைஞர் கணபதி இரவீந்திரனின் ஆளுமை மற்றும் இயல்பாக அவரிடத்தில் உள்ள நட்புக் கொண்டாடும் பண்பு போன்ற விடயங்கள் என் மனதை இதமாக்கின.





யாழ்ப்பாணத்தில் தொண்ணூறுகளின் ஆரம்ப த்தில் இடம்பெற்ற விழாக்கள் மற்றும் பொது நிகழ்ச்சிகள் ஆகியவற்றிலும் சில கவியரங்குகளில் கலைஞர் கணபதி இரவீந்திரனின் ஆற்றலை நேரில் கண்டு ரசித்திருந்த நான், 1997ம் ஆண்டளவில் கனடாவில் அவர் கால்பதித்த நாள் தொடக்கம் அவரது கலை இலக்கியம் சார்ந்த பங்களிப்புக்களை ஆவலோடு நுகரும் ஒரு இரசிகனான இருந்து வருகின்றேன். இந்த இடத்தில் அவரது நடிப்பாற்றல் பற்றி விதந்துரைப்பதா? இலக்கிய செழுமையைப்பற்றி சொல்லுவதா? அன்றி ஊடக நிறுவனங்காகவும் அவை சார்ந்த நண்பர்களுக்காகவும் அவர் செலவு செய்கின்ற நேரத்தையும் உடல் உழைப்பையும் பற்றி புகழ்ந்து பாராட்டுவதா? என்று நான் தடுமாறுகின்றேன்.

குழந்தைகள் முதல் மூத்தோர் வரை அவர்களிடத்தில் சென்று அவர்களை ஊக்குவிப்பது அவர்களிடம் உள்ள கலை சார்ந்த ஆற்றல்களை வெளிப்படுத்துவது அல்லது தன்னிடத்தில் உள்ள நகைச் சுவையை வெளிப்படுத்தும் தன்மையால் அவர்களை மகிழ்விப்பது போன்ற வழமையான அவரது சமூகப்பங்களிப்பு அவரை எமது சமூகத்தில் உயர்ந்த இடத்திற்கு இட்டுச்சென்றுள்ளதை நாம் காணலாம்.

உள்ளத்தில் தயக்கம் உடலில் சோர்வு எதையுமே முன்னிறுத்தாது எப்போதும் எமது சமூகம் எமது ஊடகம் எமது உறவுகள் என்று எண்ணியபடி அவர்களோடு கூடிக்குலாவுவதிலும் தான் நிற்கும் இடத்தை கலகலப்பானதாக மாற்றி அனைவருக்கும் உற்சாகம் தரும் வகையில் பங்களிக்கும் பண்பு அவரிடத்தில் உள்ள ஓர் பலம் என்றே நான் பார்க்கின்றேன். எமது கனடா உதயன் பல்சுவைக் கலைவிழாவிற்கு 2007ம் ஆண்டு பிரபல நடிகை மனோரமா அழைக்கப்பட்ட போது அந்த மேடையில் தனது நடிப்பாற்றலை வெளிப்படுத்தி அந்த திரையுலகத்தாரகையின் பாராட்டுக்களையும் அன்பான தழுவலையும் பரிசாகப் பெற்றவர் எம் கலைஞர் கணபதி இரவீந்திரன் அவர்கள்.

இதே போன்று தனக்கு கிட்டுகின்ற மேடைகள் சில நிமிடங்களோ அன்றி சில மணி நேரங்களோ என்றாலும் மனம் சலிக்காமல் அங்கு கூடியிருப்பவர்களை கட்டிப் போட்டு வைக்கக்கூடிய ஆற்றலுள்ள கணபதி இரவீந்திரன் இன்னும் பல ஆண்டுகள் இந்த மண்ணில் வாழ்ந்து கலையுலகத்திற்கும் நண்பர்களுக்கும் எப்போதும் கலைப்படைப்புக்களையும் குதூகலத்தையும் அள்ளி வழங்கவேண்டும் என்று பிராத்திக்கின்றேன்.

**அன்புடன்**
**ஆர்.என்.லோகேந்திரலிங்கம்**
**பிரதம ஆசிரியர்**
**கனடா உதயன்**



# கலைவேந்தன் காவியச்சாரல்



நந்தவனத்திற்குள் பூவாசம் வாங்க,
உள்ளே நுழையும் உள்ளங்களே!
உள்ளே! உண்மைகள் மட்டும் தென்றலாய் வீசும்!
சத்தியமே வண்ணப்பூக்களாய் மலர்ந்திருக்கும்!
வீண்புகழ்ச்சிக்கு இங்கே இடம் இல்லை.
வானத்தை சிறு குடை அளவாய் சுருக்கு,
ஏழ்கடலை சிறு கமண்டலத்தினுள் அடக்கு என்றால்
நான் அகத்தியனாக பிறக்க வேண்டும்.
ஒரு வரலாற்றை ஒர்இரு பக்கங்களுக்குள்
பதிவு செய்துவிட முடியாது.
இது ஒரு வரலாற்றின் முன்னோட்டம் என்றே
தெரிந்து கொண்டு வாசியுங்கள்!



எழுத்திற்கும் உண்டு அங்கீகாரம்....
அது யார் யாரைப்பற்றி என்பதை பொறுத்து
வாசகர்கள் வழங்கும் சன்மானம்
அதுவே எழுத்தின் அங்கீகாரம்!
உருண்ட பளிங்கு கற்பாறை சூரிய ஒளி வாங்கி
தங்க நிலவென்று வானில் ஊர்வலம் வருகிறது.
நிலவு சூரியனைப் பற்றி
புகழாரம் சூட்டுவது நியம்தானே!
கலைக்கதிரொளியால் உலகளந்த
கலைவேந்தன் பெருமைகளை
அவன் பாதச்சுவடுவழி நடக்கும்
சிறுத்தொண்டன் எழுதுகிறேன்!



பலனை எதிர்பாராமல் கடமை செய்வதில் கீதாசாரம்.
மண்ணுலுலகத்தினில் பிறவி மாசற பிறந்த
மணிவாசகத் தமிழின் உயிர் வாசகம் இவனே!
"உலகெலாம் உணர்ந்து ஓதுதற்கு அரியவன்"
இந்தவார்த்தைக்கு சொந்தக்காரன் சேக்கிழார் பெருமான்.
சேக்கிழார் இன்றில்லை.
அதனால் அவர் அனுமதி இல்லாமலே
பெரிய புராணத்தின் முதற் செய்யுளின் முதற் சீரையே
கலைவேந்தன் புகழ்ச்சீராக பதிவு செய்கிறேன்.
இது வெறும் எழுத்தலங்காரம் அல்ல.
எழுத்து, கவிதை, பேச்சு, நடிப்பு, நகைச்சுவை...
தமிழில் இத்தனை துறைகளிலும் மூப்பிய அறிவும்
கேட்டதும் கொடுக்கும் தெய்வீக திறமையும் உடைய
கலைவேந்தன் பெருமைக்கு சான்று சொல்ல
தமிழில் எனக்கு தெரிந்த உயர்ந்த வாசகம் வேறில்லை.

# கலைவேந்தன் காவியச்சாரல்



தமிழ்....! அகவை அறியாதது.
தமிழ் கோடி வருடங்கள் ஆனாலும் இளமை குன்றாதது.
கணபதி ரவீந்திரன் தமிழின் அவதாரம்.
பிறப்பு இறப்பு அவதாரங்களுக்கு இல்லை.
தமிழை தமிழால் அலங்கரிப்பதே தமிழர் மரபு.
பைந்தமிழ் ஞாலத்தில் வீசிய செந்தமிழ் காற்றே!
அறியாமை இருளுக்குள் அகலா விளக்கேற்றிய
சூரியக்கலைஞனே! கலைவேந்தனே!

உனது விழிகளிடம்தான் சூரியக்கதிரொளி தோற்றுப்போனது.
கூரிய வேலினும் கூரியது ஒன்று உளதெனில்
கலைவேந்தனே நின் அறிவு மட்டும்தான்.
ஒவ்வொருவர் பிறப்பும் வாழுதலுக்காகவே நிகழ்ந்தது.
வாழுதல் பொய்த்தால்... வாழ்க்கை பொய்த்துவிடும்.
வாழ்வாங்கு வாழுதல் வாழ்க்கை என்றார் வள்ளுவர்.
வாழுதல் என்றால் இப்படித்தான் என்று
வாழ்ந்து காட்டினான் கலைவேந்தன்!
நல்ல மனிதனாய் நல்ல நண்பனாய் நல்ல சமூகசேவகனாய்
வாழ்க்கை பாடநூல் நிறைந்த நடமாடும் நூல்நிலையமாய்
இந்த நூற்றாண்டில் வாழ்ந்துகொண்டிருக்கும்
கலைவேந்தனை பாராட்டுவதில் என்தமிழ் பெருமைகொள்கிறது!



பூவிதழ் மென்மை அறிந்து
மெல்ல தழுவிச்செல்லும் தென்றல் காற்றைப்போல்
இதயங்கள் வலிக்காமல் பேசுவதால்
நில்லாது சொரியும் உலக அதிசயம் நயகரா
அதி உறைநிலை தாங்காமல் உறைந்ததும் உண்டு.
கலைவேந்தன் நெஞ்சில் பெருகிப் பாயும் அன்பு நீர்வீழ்ச்சி
எந்த நிலையிலும் வற்றிய வரலாறு கண்டதில்லை.
இரக்கம் நிறைந்த இதயம் என்பதை
கருணைகூர் விழிகள் சொல்லும்.
கலைவேந்தன் நல்ல மனிதன் என்பதற்கு இதற்குமேல்
என்ன சான்று வேண்டும்.



எழுத்தாளர்களும் கவிஞர்களும் புராண இதிகாசங்களைப் புரட்டி
ஆதாரங்களை திரட்டி நல்ல நட்பிற்கு சாட்சியங்களாக்கினார்
பனைத்துணை அனையர் நண்பர் என்கிறது நாலடியார்.
உடுக்கை இழந்தவன் கைபோல் என்கிறது குறள்ப்பா.
படித்து தெரிந்து கொண்ட நட்பின் பெருமைகளை
கலைவேந்தனிடம் பார்த்து பழகிக் கொண்டோம்.
நட்பின் உயிர்விளக்கம் கலைவேந்தன் என்றால் மிகையில்லை.

# கலைவேந்தன் காவியச்சாரல்



என் வாழ்க்கைச்சாலையில் நிறையவே தோல்விகள்
தோள்கொடு தோழா என்று
கலைவேந்தன் வீட்டு கதவைத்தட்டினேன்
பற்றிப்படர்வதற்கு பட்டமரக் கொம்பேனும்
பக்கத்தில் இல்லையே என்று
புழுதியில் அலைபுரண்ட தெருவோர முல்லைக்கொடி
பாரியின் பொன்தேர் கிடைத்ததென்று பரவசப்பட்டதுபோல்
என்னை கைகொடுத்து உயர்த்திவிட்டவன்
என் உயிர் நண்பன்
உயிராய் மெய்யாய் எனக்குள் உறையும் தமிழாய்
என்னுடன் கலந்தாய் உன்னை எனக்கு பிடிக்கும்!

வெல்லும் சொல் இல்லா சொல் அறிந்து
சொல்லும் உன் சொல்லதிகாரம் பிடிக்கும்.
சமுதாயச் சீர்கேடுகளை கண்டு கொதித்து
உன்கை எழுதுகோல் தலை குனிந்தது
எழுத்து மேடையில் நெருப்பை உமிழ்ந்ததுவே
அந்த எழுத்ததிகாரம் எனக்குப் பிடிக்கும்.
புலம்பெயர் மண்ணில் மன அழுத்தங்களால்
சிரிப்பை தொலைத்துவிட்ட முகங்கள்
அவர்களை சிரிக்க வைப்பதற்கு
சமூகச் சிந்தனையை சலவை செய்யும்
நல்ல பொருள் நிறைந்த கருத்துக்களை
மக்கள் மனதில் விதைக்கும் உனது நகைச்சுவைகளில்
பொருளதிகாரம் கோலோச்சும்!



எதுகை மோனை அடி தொடை சீர் தளை
கருவிளம் கூவிளம் சந்தம் சாரிகை
இன்னோரன்ன யாப்பு விதிகள்
முறை முறை கற்ற கவிஞரும் வியக்க
பாமரத்தமிழனும் கருப்பொருள் அறிய
உனக்கென யாப்பு யாத்தவன் நீயே!
உன் யாப்பதிகாரம் எனக்குப் பிடிக்கும்!
நீயோ நடக்கும் தமிழ் இலக்கணம்
ஏட்டில் இதுவரை எவரும் எழுதாத இலக்கியம்
உயிருள்ளவரை உன்னை எனக்குப் பிடிக்கும்!

நிறைவாக..........
மண்ணில் நல்ல மனிதப்பிரதியை அச்சிட்ட
உன் தாய்க்கொரு நன்றி!
வெறும் எழுத்துக்களால் சொல்லிவிட முடியாது.
வாழ்த்து மாலைகளின் வாசனையும் போதாது.
வள்ளுவன் குறளிலும் தேடிப்பார்த்தேன்.
இந்த தியாகத்திற்கு குறளிலும் வறுமை கண்டேன்.
எங்கள் கலைவேந்தனை மறுபிரசவமாய் உயிர்கொடுத்த
தெய்வத்தாய் ரூபி அவர்களின் திருத்தாள்களில் சிரம்வைத்து
வாழ்த்தி வணங்கி நிறைவு செய்கிறேன்!



- கலாராஜன் -

<u>கலையுலகில் பொன்விழாக்காணும் ரவீந்திரன் மாமா</u>

" தோன்றின் புகழோடு தோன்றுக ; அஃதிலார் தோன்றிலன் தோன்றாமை நன்று ."

என்னும் வான் புகழ் வள்ளுவன் வாய்மைக்கு ஏற்ப புகழோடு பிறந்து புகழோடு, கலையோடு வாழ்ந்து கொண்டிருக்கும் மதிப்பிற்குரிய கணபதி ரவீந்திரன் மாமாவின் "கலைத்துறையில்" பொன்விழாவிலும் , அகவை அறுபத்தைந்து விழாவிலும் சிறுமியாகிய நான் கலந்து கொண்டு வாழ்த்துவதில் பெருமை கொள்கின்றேன் .

என் நா நின்று இனிக்கும் அன்னைத்தமிழால் வானொலி சிறுவர் நிகழ்ச்சி மூலம் ரவீந்திரன் மாமா எனக்கு அறிமுகமானார் . என்னை மாமாவுக்கும் எனக்கு மாமாவையும் மிகவும் பிடிக்கும் . ரவீந்திரன் மாமா பல்துறை ஆற்றல் கொண்ட ஒரு மாபெரும் கலைஞர் . நகைச்சுவையாகட்டும் , நடிப்புத்துறையாகட்டும் , ஒளிபரப்பு துறையாகட்டும் , கவிதை , கதை , பேச்சு , நாடகம் என சிறுவர்கள் எந்த நிகழ்வை வெளிப்படுத்தினாலும் , அவரும் சிறுவர்களாக மாறி அவர்களோடு ஒன்றித்து உரையாடுவதும் அவர்களை தட்டிக்கொடுத்து ஊக்குவிப்பதும் , உற்சாகப்படுத்துவதும் எனக்கு மிகவும் பிடிக்கும் . புலம் பெயர்ந்த கனடிய மண்ணில் தமிழ் சிறுவர்கள் தமிழ் மொழியை , பண்பாடு கலை கலாச்சாரத்தை தக்க வைக்க வேண்டும் என்பத்திற்காக வானொலி சிறுவர் நிகழ்ச்சி ஊடக உழைத்த பெருந்தகை மாமா அவர்கள்.

"மாதா பிதா குரு தெய்வம்"

என்பதற்கமைய , எனது பெற்றோர் எனது தமிழ் ஆசிரியருக்கு அடுத்ததாக கணபதி ரவீந்திரன் மாமா அவர்களும் எனது தமிழ் ஆற்றலைக் கண்டு வியந்து ஊக்கப்படுத்தி உற்சாகப்படுத்தி வருபவர் .அவருக்கு நன்றி கூற வார்த்தைகள் இல்லை . இந்த நல்ல நாளில் நன்றியோடு தலை சாய்த்து வணங்குகின்றேன். என் தாய் மொழியாம் தமிழால் தமிழ் பெருங்கலைஞன் கணபதி ரவீந்திரன் மாமாவை வாழ்த்துவதில் சிறுமியாகிய நான் பெருமைகொள்கின்றேன் .

மாமா தமிழ் உள்ளவரை
உங்கள் கலை புகழ் வாழட்டும்
தமிழ் அன்னைக்கு நீங்கள் ஒரு
கலை பொக்கிஷம் - இன்னும்
நூறாண்டு நூறாண்டு வாழ்க ! வாழ்க !

நன்றி வணக்கம்



**- குபேரகா -**

# தனித்துவமான கலைஞன் கணபதி இரவீந்திரன்

- பொன்னையா விவேகானந்தன் -

தனித்துவ அடையாளங்களைக் கொண்ட சமூகத்தின் இருப்பிலும் எழுச்சியிலும் அச்சமூகம் சார்ந்த கலைகளுக்குப் பெரும் பங்கு உண்டு. தலைமுறைதோறும் இனத்தின் மரபுகளையும் விழுமியங்களையும் பண்பாட்டு நடத்தைகளையும் பேணிச்செல்வதில் கலைகளே சிறப்பிடம் பெறுகின்றன.

தாயகத்துக்கு வெளியே பல்லாயிரம் மைல்களுக்கு அப்பால் பல்லினச் சூழலில் வாழும் நாம், இனம், மொழி, பண்பாடு சார்ந்து எமது அடையாளங்களைப் பேணிச் செல்வதில் பெரும் சவால்களை எதிர்கொண்டு வருகின்றோம். எமது வாழ்புலத்தில் இந்த சவால்களை எதிர்கொள்வதில் எமக்குத் பெருந் துணையாகத் திகழ்வன கலைகளே. கலைகளின் வழியே இப்புலத்தில் எம்மை நாம் இணைத்து கொள்வதிலும் இருப்பை வலுவாக்குவது தொடர்பிலும் பல முயற்சிகளைச் செய்து வருகின்றோம்.

இந்த கலை முயற்சிகளின் வழியேதான் கணபதி இரவீந்திரன் என்ற கலைஞர் கனடா தமிழ்ச்சமூகத்துக்கு நெருக்கமாகின்றார்.

கலை வெளிப்பாடுகளில் அரங்க ஆற்றுகை எனப்படுகின்ற நாடகச்செயற்பாடுகள் முதன்மையானவை. வாழும் சமூகத்தின் பல்வேறு உணர்வுகளையும் இயல்பான நடத்தை களையும் ஆற்றுகை வழியாக வெளிப்படுத்தி, சமூகத்தை இனம் சார்ந்த வாழ்வியலோடு இணைக்கும் தன்மை அரங்க நிகழ்த்துகைகளுக்கு உண்டு.

இவ்வாறான கனடாத்தமிழரின் கலைப் பணிகளில் குறிப்பிடத்தக்க தனித்துவமான அரங்க ஆளுமையாகக் கலைஞர் கணபதி இரவீந்திரன் அவர்களைக் குறிப்பிடலாம்.

இந்த விசித்திரமான புலவாழ்விலும் பலருடைய நினைவுகளில் ஆழமாகப் படிந்து கிடக்கின்றன தாயக வாழ்வியலின் ஞாபகங்கள். அந்த மண்ணை இழந்த வலியும் இந்த மண்ணில் எதிர்கொண்ட வலிகளும் எமக்குள் எண்ணிலடங்காதவை. எமக்குள்ளேயே புதைந்து கிடக்கும் இந்த வலிகளைப் பல வடிவங்களில் அரங்க ஆற்றுகையாக வெளிப் படுத்தியவர் கணபதி இரவீந்திரன்.






அரங்க உத்திகளுக்கு அப்பால், வெகு இயல்பாக அன்றாடம் நாம் காணும் மானுடப் பண்புகளை வெளிப்படுத்திச் செல்லும் நாடக வெளிப்பாட்டில் கை தேர்ந்தவர் கணபதி இரவீந்திரன். யாதார்த்த வாழ்வை வெளிப்படுத்தும் வசனங்களும் சமூகச்சீர்கேடுகளை நையாண்டி செய்யும் உடல் மொழியும் இவரிடத்தில் நிறையவே உண்டு.

இவருடைய பல ஆற்றுகைகள் தாயக வாழ்வைப் படம் பிடித்துக் காட்டுவனவாக அமைந்திருந்தன. நாம் எதை இழந்து வந்தோமோ அதை அரங்க ஆற்றுகை வழியே கண்டுணர இவை வழி செய்தன.

நடிப்பில் உரையாடலுக்குத் தனித்துவமான சிறப்பு உண்டு. அரங்க ஆற்றுகையில் உடல்மொழியை விட உரையாடலுக்கே முதன்மை வழங்குவர். பார்வையாளர் எல்லோரையும் முகபாவங்களும் உடல்மொழியும் சென்றடையாது. ஆனால் உரையாடல் சென்றடையும். ஏற்கும் பாத்திரம் அறிந்து, அதன் உணர்வைக் புரிந்து, தேர்ந்த வசனத்தை உயர்ப்போடு பேச வேண்டும். இதில் வல்லவர் கணபதி இரவீந்திரன். மண்ணின் மணம் சிறிதும் குறையாத அவருடைய உச்சரிப்பும் தேவைக்கேற்பத் தொனியைப் பயன்படுத்தும் திறனும் நிறையவே இவருக்கு உண்டு.



கனடாத்தமிழரின் கலை நிகழ்த்துகை தொடர்பான வரலாற்றில், கணபதி இரவீந்திரனுக்கு நிரந்தர இடம் உண்டு. போராட்டங்கள் நிறைந்த வாழ்வியலைக் அத்தியாயத்தில் கலைஞர்களாகத் தம்மை வெளிப்படுத்தி நிற்பவர்களும் ஒருவகையில் போராளிகளே. பொருளாதார இருப்புகளோடு போராடியபடியே, சமூகத்தேவைகளுக்காகவும் ஆன்ம நிறைவுக்காகவும் கலைப்பணி செய்வவர்கள் வரலாற்றில் பதியப்பட வேண்டியவர்கள். இவ்வகையில் கனடாத் தமிழச் சமூகத்தவரிடையே முக்கியத்துவம் பெற்றவராகத் திகழ்கின்றார் கலைஞர் கணபதி இரவீந்திரன் அவர்கள்.

தன்னுடைய கலைவாழ்வில் அறுபது ஆண்டுகளை எட்டும் அன்பு நண்பர் கலைஞர் கணபதி இரவீந்திரன் அவர்களை வாழ்த்துவதில் நான் பெரு மகிழ்ச்சியடைகின்றேன். தொடரட்டும் அவருடைய கலைப்பணி.

**- பொன்னையா விவேகானந்தன் -**



# கலைகளில் சிறந்தது நாடகக்கலையே!

கல்வியில் சிறந்த கம்பர் சரசுவதி அந்தாதி என்ற நூலை அருளியுள்ளார். அதில் வரும் பாட்டில் ஆய கலைகள் அறுபத்து நான்கினையும் தனக்குத் தருமாறு கலைவாணியிடம் கேட்கிறார்.

ஆய கலைகள் அறுபத்து நான்கினையும்
ஏய உணர்விக்கும் என்னம்மை - தூய
உருப்பளிங்கு போல்வாள் என் உள்ளத்தினுள்ளே
இருப்பளிங்கு வாரா(து) இடர்.

அறுபத்துநாலு கலை என்னும் பெயர் தமிழ் ஆதலாலும், அறுபத்துநாலாக வகுக்கப்பட்ட கலைகள் அனைத்தும் தமிழர்க்கு உரியனவாகும்.

ஆயகலைகள் அறுபத்து நான்கினிலும் இயல், இசை, நாடகம் சிறப்பு வாய்ந்தவை. இயலும் இசையும் சேர்ந்தது நாடகக் கலை. நாடகக் கலைகள் தமிழர் மரபில் தோன்றி வளர்ந்து நிலைபெற்று நிற்கும் நாடகக்கலையை தமிழர் நாடகக்கலை எனலாம். தமிழ் மரபில் கதை தழுவிவரும் ஆட்டத்தை கூத்து என்பர்.

இந்தக் கலைகள் எல்லோருக்கும் கை வராது. பள்ளிக்கூடங்களில் படித்தாலும் ஒரு சிலருக்கே இந்தக் கலைகள் வாலாயமாகிறது. திரு கணபதி இரவீந்திரன் இந்த நாடகக் கலைக்கு புகுந்த நாட்டிலும் உயிரூட்டி வளர்த்து வருகிறார். பத்து இருபது ஆண்டுகள் அல்ல, ஐம்பது ஆண்டுகள் கலையுலகில் பயணம் செய்து வருகிறார்.

அண்மையில் முகநூலில் அவர் நடித்த நாடகத்தில் இருந்து ஒரு காட்சியைப் பதிவேற்றம் செய்திருந்தார். சவப்பெட்டியில் இறந்து போனவர் போல படுத்திருக்கிறார். பின்னணி தெரியாதவர்கள் அந்தக் காட்சியை உண்மையென்று நம்பி இரங்கல் தெரிவித்துவிடுவார்கள்.

அவரது கலைப் பயணம் தொடர வேண்டும். மனிதன் உறட்டி மட்டும் உண்டு வாழ்பவன் அல்லன். அவன் சுவைத்து மகிழ இசை, நடனம், நாடகம் போன்ற கலைகளும் தேவைப்படுகின்றன.

திரு. கணபதி இரவீந்திரனது
கலைப்பயணம் சிறக்க வாழ்த்துக்கள்.

**நக்கீரன்**
**தலைவர்**
**தமிழ்ப்படைபாளிகள் கழகம்**

# பல்கலை வேந்தனுக்கு வாழ்த்துப்பூத்தூவல்கள்...

எண்ணத்தில் இனிமை வாக்கினில் வலிமை
உள்ளத்தில் உணர்வில் தமிழ் என்று
ஒலிக்கின்ற குரலுக்குள்
ஒளிர்கிறது பெயரொன்று
கலைவேந்தன் கணபதி ரவீந்திரன் என்று.

கற்றவர் சபைதனில் கைகட்டி வணங்கி
கலைகளை மொழியாக்கி
உற்றவர் மனங்களில் உணர்வினைத் தமிழாக்கி
நற்றவம் செய்கின்ற நாயகனே
முத்தமிழ் வித்தகனாகி வளர்த்த கலை
காற்றோடும் கதைபேசி காலங்கள் வெல்கிறதே.

"சாம்ராட் அசோகன்" பதினைந்து வயதில்
நாடகஅரங்கில் அரங்கேற்றம்
"ஈழநாடு" பத்திரிகையிலும் இதே வயதில்
இலக்கியம் சுமந்தபடி எழுதுகோல் கைபிடித்தபயணம்.
எண்ணி எண்ணி வியக்க வைக்கும்
எண்ணிலடங்கா நாடகங்கள் சமூகம் சார்ந்தும்
சரித்திரம் சார்ந்தும் நகைச்சுவை சார்ந்தும்
உள்ளங்களைக் கொள்ளைகொண்டதில்
பெருமையும் சிறப்புமே.

எந்தக் கலைஞர்களையும் சரி நிகராக ஏற்கும் குணம்
இயல்பிலே தனக்குள் நிறைத்து
கலை வேந்தன் ஆனார்.
ரசிகர்களின்
நினைவில் நிற்க ஒரு பதிவு
கனேடிய மண்ணில் முத்திரை பதித்த நாடகங்களில்
"தவிப்பு" முதன்மையானது.
பலரது பாராட்டும் பணப்பரிசும் பெற்றுக்கொண்டது.
மேலும் மேலும் இவை தொடர வாழ்த்துக்கள்.

பொன்விழா நாயகன் இனிய சகோதரன்
அன்பின் நண்பன்
கலைவேந்தன் கணபதி ரவீந்திரன் அவர்கள்
குறைவில்லாத இறையாசி
நீண்ட ஆயுள், ஆரோக்கியம்
நிறை செல்வம், மங்காத புகழ்
அனைத்தும் பெற்று வளமாகவாழ வாழ்த்துப் பூத்தூவல்கள்
வாழ்க பல்லாண்டு சொல்லாண்டு
பலநூறாண்டு.

அன்புடன்
யாழ் தமிழ் மகள்
**மணிமேகலை - கைலைவாசன்**

# சகலகலா வல்லவன் கலைவேந்தன் ரவீந்திரன்!

துன்புறும் அடியார்களின் துயரங்களை எல்லாம் தங்க வேலாலும், தன் கருணையினாலும் தூர விலகி ஓடிடச் செய்து கனிவுடன் காக்கும் கந்தக்கடவுளுக்கு நிகரான கருணையாளர் யாருளர்? விண்ணிலே விரிந்து பரந்து கிடக்கும் விண் மீன்கள் அத்தனையும் கண்ணினைக் கவர்ந்திடும் விடி வெள்ளிக்கு ஈடாகுமா? அதே போன்று இன்று கனடா மண்ணிலே இயல் தமிழ், நாடகத் தமிழ், வானொலி கலை ஆகியவற்றில் மிக்க அனுபவமும், திறமையும் கொண்ட ஜாம்ப வானாகத் திகழும் திரு.கணபதி ரவீந்திரன் இன்று தனது அறுபத்தி ஐந்தாவது ஆண்டு விழாவினை கொண் டாடுவது எழுத்தாளர்கள், பத்திரிகை யாளர்களாகிய எம்மையும், ஏனைய அவரது நேயர்கள், நண்பர்கள் அனை வரையும் அகமிக மகிழச்செய்கின்றது.

"எண்ணும் எழுத்தும் கண்ணெ னத்தகும்" என்ற பொன்னான கூற்று க்கமைய, காணும் சம்பவங்களையும், நிகழும் வைபவங்களையும் பார்த்து ரசிப்பதோடு மாத்திரம் நின்று விடாது, அவற்றை செய்திகளாக, கட்டுரைக ளாக எழுதியும், நாடகங்களாக வடி வமைத்து வாசகர்களினதும், நாடக ரசிகர்களினதும் மனங்களை கொள்ளை கொண்டுள்ள நமது கலை வேந் தன் கணபதி ரவீந்திரனுக்கு இணை யானோர் இங்கு அரிதிலும் அரிது. பாரிலுள்ள இன்பங்களை எல்லாம் நுகரத் தூண்டும் பதின்ம வயதிலேயே பரந்த சிந்தனா வாதியாகவும், சிறந்த எழுத்தாளனாகவும் பத்திரிகைத் துறையில் பாதம் பதித்து தொடர்ந்து ஐம்பது ஆண்டு காலம் சேவை செய்து சகல கலா வல்லவனாகத் திகழ்ந்து வரும் கணபதி ரவீந்திரனை பாராட்டி விழா எடுப்பது காலத்தால் செய்ய வேண்டிய சாலப்பொருத்தமான பணியாகும்.

தமிழ் வேறு, கடவுள் வேறு இல்லை. தமிழ் தான் முருகன், முருகன் தான் தமிழ் என்பது எவ்வளவு பொருத்தம்? முருகனுக்கு முகங்கள் ஆறு, கரங்கள் பன்னிரண்டு, கையிலே ஆயுதமாக வேலாயுதம் மிளிர்கின்றது. அதே போன்று தமிழில் உயிரெழுத்துக்கள் பதின்மூன்று. அவற்றுள் குறுகிய சத்தத்தினைக் கொண்ட அ,இ,உ,எ,ஐ,ஒ. ஆகிய குறில் எழுத்து க்கள் ஆறு. நெடிய சத்தத்தினைக் கொண்ட ஆ,ஈ,ஊ,ஏ,ஓ,ஔ நெடில் எழுத்துக்கள் ஆறு. பதின் மூன்றாவது, ∴ என்ற ஆயுத எழுத்து.

இலங்கை வாழ் தமிழ் மக்களின் பாரம்பரிய நகராகவும், ஈழ நாட்டின் தலையாகவும் திகழும், யாழ்ப்பாண நகரின் புனித கிராமமாக திகழ்வது நல்லூர். ஆங்கே கோயில் கொண்டு எழுந்தருளி இருப்பவர் தமிழ்க் கடவுளான முருகப் பெருமான். யாழ்ப்பாணத்தில் இருந்து வெளி வந்த "ஈழநாடு" பத்திரிகையின் நல்லூர் தொகுதி நிருபராக தனது பதினான்காவது வயதினில் கையிலே எழுதுகோலை ஏந்தி, செய்தி எழுத ஆரம்பித்தவர் இந்த இளம் பத்திரிகையாளரான நமது கணபதி ரவீந்திரன்.



# சகலகலா வல்லவன் கலைவேந்தன் ரவீந்திரன்!

கோண்டாவில் கிராமத்தில் தவறுதலாக கிணற்றில் வீழ்ந்து உயிரிழந்த ஒரு சிறுமி தான், இவரை பத்திரிகையாளர் ஆக்குவதற்கு வித்திட்டார் என்பது அதிசயம் தான். அத்துற்பாக்கிய சம்பவத்தினை கல்வியங்காட்டை சேர்ந்த திரு. ஸ்ரீ மகாதேவன் என்ற பத்திரிகை நிருபர் அங்கு நின்ற பொலிஸாருடன் உரையாடி விபரங்களை திரட்டி, புகைப்படங்களையும் எடுத்து, விரிவான செய்தியாக வீரகேசரி, தினகரன், ஈழநாடு ஆகிய அனைத்து பத்திரிகைகளிலும் வெளிவரச் செய்திருந்தார். அதனை நேரில் அவதானித்து ஆச்சரியப்பட்ட திரு. கணபதி ரவீந்திரனுக்கு தானும் ஒரு பத்திரிகையாளனாக வந்து செய்திகளை எழுத வேண்டும் என்ற ஆவல் ஏற்பட்டது. தனது ஆவலை அவர் திரு. ஸ்ரீமகாதேவனிடம் கூறியதும் அவரே தான் பதினைந்து வயது சிறுவனான கணபதி ரவீந்திரனை 1983ம் ஆண்டு ஈழநாடு ஆசிரியர் திரு.கோபால ரெத்தினத்திடம் அறிமுகப்படுத்தி வைத்தார். திரு.கணபதி ரவீந்திரன் அன்று முதல் அப்போதைய அரசியல் பிரமுகர்களாகத் திகழ்ந்த தந்தை செல்வா, ஜி.ஜி.பொன்னம்பலம் ஆகியோர் பங்கு பற்றிய கூட்டங்களுக்குச் சென்று அவர்களது உரையினை செய்தியாக எழுதி ஈழநாடு பத்திரிகையில் வெளியிட்டு வந்தார். அது மாத்திரமன்றி ஓவியக் கலையும் கைவரப் பெற்ற இவர் தந்தை செல்வா, ஜி.ஜி. ஆகியோரது படங்களையும் தன் கையினால் வரைந்து காட்சிக்கு வைத்தமையும் குறிப்பிடத்தக்கது.

நல்லூர் கந்தப்பெருமானின் கருணையினால் அன்று செய்திகளை எழுத ஆரம்பித்து பெயர் பெற்ற பத்திரிகையாளரும், எழுத்தாளருமான நமது மதிப்பிற்குரிய கணபதி ரவீந்திரன் அவர்கள் 1997ம் ஆண்டு கனடாவில் காலடி பதித்தார். அடுத்த ஆண்டே கீதவாணி வானொலியில் இணைந்து அறிவிப்பாளராகப் பணியாற்றத் தொடங்கினார். இன்று அதே வானொலியில் "கதிரொளி" என்ற பெயரில் தானே இரவு வேளை நிகழ்ச்சிகளை தயாரித்து வழங்கி வருவதோடு, செய்திகளையும் வாசித்து வருகின்றார். அதன் மூலம் வானொலி நேயர்களின் குறிப்பாக முதியோர்களின் பாராட்டுதல்களையும் பெற்று வருகின்றார். அத்துடன் காலத்துக்கு காலம் நகைச்சுவையான நாடகங்களை தானே எழுதி, ஏனைய கலைஞர்களுடன் இணைந்து மேடையேற்றி, கணீரென்ற குரலில் தட்டுத் தடங்களின்றி வசனங்களைப் பேசி நடிப்பதிலும் வல்லமை பெற்றுத் திகழ்கின்றார். அத்துடன் நகைச் சுவை பகிடிகளின் மூலம் ரசிகர்களை வயிறு குலுங்க சிரிக்க வைத்து அவர்களின் கரகோஷத்தையும், பாராட்டினையும் பெற்று வரும் பெருமைக் குரிய நாடகக்கலைஞராக திகழ்கின்றார்.

ஒன்ராறியோ தமிழ் முதியோர் சங்கம் நடாத்திய நாடகப்போட்டியில் இவர் எழுதிய "தவிப்பு" என்ற நாடகம் முதலாமிடத்தை பெற்று அதற்கான பரிசுத்தொகையான ஆயிரம் டொலர்களை பெற்ற பெருமையும் கலை வேந்தன் கணபதி ரவீந்தினுக்கு உண்டு. அவர் தொடர்ந்தும் கனடா வாழ் தமிழ் மக்களை தனது எழுத்துக்கலை, நாடகக்கலை ஆகியவற்றின் மூலம் மகிழ்விக்க ஆண்டவன் நீண்ட ஆயுளையும், பூரண சுகத்தையும் வழங்க வேண்டும் என வாழ்த்துகின்றேன்.

## வீரகேசரி மூர்த்தி



# கற்பகக் களிறே கணபதியே
# நற்கதி அருள்வாய் குணநிதியே



அப்பனை மிஞ்சிய தொப்பையனே அகிலம் எல்லாம் இன்று உன் புகழே நாங்கள் வழியில் கண்டெடுத்த குணநிதியே ரவி இன்று நீங்கள் மண்ணில் மலர்ந்த பொன்னாள் அத்தோடு நாடகத் துறையில் கால் பதித்து ஐம்பதாவது ஆண்டில் இன்று பொன்விழாக் காணும் பாக்கியம் ஆண்டவன் உங்களுக்கு அருளியுள்ளான் அவன் அருளால் இன்று கலைவேந்தன் ஒரு எழுத்தாளன் பத்திரிகையாளன் சரளமாக நகைச்சுவை பேசக் கூடிய ஆற்றல் தாயைத் தெய்வமாகப் போற்றும் கருணை நிறைந்தவன் கர்ணனைப்போல மற்றவர்களுக்கு கொடுத்து உதவும் பண்பாளன் இன்னும் எத்தனையோ படைப்புக்களை இந்த மண்ணில் ஈட்டி பெருமை சேர்த்துள்ளீர்கள் மேலும் மேலும் ஆண்டவன் அருளால் பெருமை ஈட்டுவீர்கள் எங்களுடைய அன்பான வாழ்த்துக்களும் உங்களுக்கு எபோதும் உண்டு. எங்கள் இருவரின் அன்பு வாழ்த்துக்கள் காணிக்கை சீதை பெற்ற பாலகனோ! ஸ்ரீ இராமன் பெற்ற மகனோ அஞ்சு குடிக்கு அரசோ அஞ்சுகத்தின் பாலகனோ வில் எடுத்து வந்த வித்தகனின் பாலகனோ ஆதிசிவன் பாலகனோ அம்பிகையின் பாலகனோ வனம் போன பாண்டவர்க்கு வழித்துணையாக வந்தவனோ

கலைவேந்தா ரவி.....

இனிமையான இதயமே அதி சிறந்த தேவதையே ரூபி கற்றவர் கருத்தை காதில் விழுத்தி மற்றவர் சொல்லை வாதில் வென்று நன்றி மறத்தல் என்ற களையை வாழ்க்கை என்ற வயலில் களைந்து மனித வாழ்வைச் சிறப்பிப்பதற்கே பெண் என்ற பிறவியை ஆண்டவன் என்பதை நிலைநிறுத்தி கடலினும் பெரிது கைம்மாறு கருதாத உதவி என்பதை ரவி ரூபி உங்களது தாரகமந்திரமாக கடைப்பிடித்து கோபத்திலும் பொறுமை ஏழ்மையிலும் பரோபகாரம் தோல்வியிலும் விடாமுயற்சி துன்பத்திலும் தைரியம் பதவியிலும் பணிவு ஏழ்மையிலும் நேர்மை அத்தோடு தாய் என்பவள் ஆண்டவன் பிரதிநிதி என்பதை மதித்து எத்தனை எத்தனை தாய் உள்ளங்களை மகிழவைத்து இன்று காலத்தயும் வென்று களமாடி பட்டொளி வீசி 50 வது பொன்விழாக் காணும் கலைவேந்தா ரவி கலையரசி ரூபி உங்களது விடா முயற்சியாலும் அன்பான வார்த்தை மற்றவர் மனதை கொள்ளை கொள்ளும் புதுப் புதுப் படைப்புக்களை ஈட்டி இமயத்தைத் தொட்டு பல்லாண்டு பல்லாண்டு பல்லாயிரத்தாண்டுகள் சுய பலத்துடன் வாழ உமை பங்கன் அருளும் எங்கள் இருவரின் ஆசிகளும் வாழ்த்துக்களும் ஆசிகளும் உரித்தாகுக!

**நன்றி**
**இப்படிக்கு**
**என்றும் அன்பு மறவாத**
**திரு. திருமதி. த. பொன்னம்பலம்**



# ஊடகவியலுடன் உறவான கலைவேந்தன் கணபதி ரவீந்திரன்





துள்ளுதமிழில் துடுக்கான வயதில் மிடுக்கான செய்திகளை எடுப்பாக எடுத்தியம்பி ஊடகத் துறையில் உலாவி உறுதி கொண்ட நாட்கள் கண்டு ஆண்டுகள் பல கடந்து தொலைக்காட்சி வானொலிகளில் புடம் போட்டு மிளிரும் கலைவேந்தனின் ஊடகவியலுடன் உறவான கலையில் மைல்கல்லான பொன்விழாவிற்கு என் உளப்பூர்வமான பாராட்டுக்கள்.

மக்கள் நாடித்துடிப்பை நன்கறிந்து, மக்கள் நலன் கருதி, நாசுக்காக நாணயமாக, சமூககாலம் கடந்த வழமைகளைக் களைந்திடவும், அதேவேளை புத்தம் புது பண்புகளை இணைத்திடவும், ஊடகத்துறையாலும் நாடகத்துறையாலும் ஆற்றிவரும் பணிகள் துல்லியமானவை.

கலைவேந்தனின் பல படைப்புக்களை நன்கு அவதானித்து வருகின்றேன். அவரது உள்ளத்தில் ஊறிக் கிடக்கும் தங்கத்தமிழின் மேல் கொண்டிருக்கும் அபாரப்பற்று, சிதையாது பேணிக்காக்கும் அக்கறைஇ வெட்டவெளிச்சமாக பிரகாசிக்கிறது. தரணியாண்ட தமிழன் தலைகுனிந்திருக்கும் காலங்களில் எல்லாம் அவன் மீண்டும் தரணியாழுவான் என்ற உறுதி, நம்பிக்கை வீண் போகவில்லை

கலைவேந்தன் தன் கண்கள் புலம்பெயர் தமிழர் மேல் ஏவப்பட்ட கணைகளைப்போல பாய்ந்தன. நாம் புலம்பெயர்ந்தோமே தவிர புலத்தை துறக்கவில்லை எனும் கோட்பாட்டினை புலம்பெயர்ந்த இரண்டாம் சந்ததியில் ஆணித்தரமாக வலியுறுத்தி வருவதும் தமிழ் தாயின் தாழ்பணிந்து அக்கறையுடன் செயற்படும் பணிகளாகும்.

கலைவேந்தன் நாடகங்கள் மூவகை. அவற்றில் சமூக சீர்திருத்த அம்சங்கள் நிறைந்தவை பலரையும் சிந்திக்க வைத்தன உளநிலை மாறுதல்களை கொண்டுவந்தன. இரண்டாவது வகையானது உறங்க முனையும் போதெல்லாம் தமிழ் உணர்வை தட்டிக்கொடுத்து என்றும் தமிழன் என்று சொல்லடா, தலை நிமிர்ந்து நில்லடா எனும் மேற் கோளை உணர்வலைகளில் ஊட்டின. மூன்றாவதாக புலம் பெயர் மக்கள் வாழ்வில் தாயகத்திற்கும் புகுந்தகத்திற்கும் பாலமாய் அமைந்தன.

கலைவேந்தன் அகவை அறுபது விழா ரூபி அவர்களால் சிறப்பாக அமைந்தது. டொராண்டோ எம் கலைஞர்கள் ஊடகவியலாளர்கள் ஏனைய தரப்பட்டவர்கள் வடக்கும் தெற்கும் மேற்கும் கிழக்கும் இணைந்த பெருவிழாவாக களைகட்டியது. இறையருளை இறைஞ்சி இனிதே எம்மின மக்கள் பணிகள் ஆற்றிட வாழ்த்துகிறேன்.

**சாமி அப்பாத்துரை**

# கலைவேந்தன் கணபதி ரவீந்திரன் : எமது கலைச்சொத்து

புலம்பெயர்ந்து வாழ்கின்ற எம்மை தனது கலைத் திறனால் மகிழ வைத்துக்கொண்டிருக்கின்ற கணபதி ரவீந்திரன் இந்த மண்ணுக்குக் கிடைத்த ஒரு கலைச்சொத்து. என்றும் எப்போதும் எங்கும் ஏதோவொரு வடிவத்தில் எம்மை மகிழவைக்கின்ற அவரின் அளவற்ற ஆற்றல் மிகப் பெரியது "என் வாழ்க்கையே என் செய்தி" (MY LIFE IS MY



MESSAGE) என்பதற்கு இணங்க வாழ்ந்து வரும் அவர் பன்முக ஆற்றல் கொண்டவர். இந்த மண்ணில் அவரின் பெயரை தெரியாதவர்கள் சிலர்தான் இருப்பார்கள். தனது 50 வருட கலைப் பயணத்தை கானவிருக்கின்ற அவர் நகைச்சுவை உலகில் அழுத்தமான முத்திரை பதித்துவருகிறார்.

கணபதிப்பிள்ளை - நல்லம்மா தம்பதிகளுக்கு மகனாக 1953 ம் ஆண்டு பிறந்த இவர் நல்லூர் கச்சேரி வீதியில் தனது இளமைக்காலத்தைக் கழித்தார். "விளையும் பயிரை முளையில் தெரியும்" என்பதற்கிணங்க படிக்கின்ற போதே படிப்பாற்றலும் நடிப்பாற்றலும் அவருடன் கூடவே வந்தது. யாழ். செங்குந்த இந்துக்கல்லூரியில் படித்துக்கொண்டிருந்த வேளையில் ஆசிரியர்களையே அசத்திவிடும் ஒரு கலைஞனாக உருவானார். அவரது சிறிய வயதில் நாடகங்கள் பலவற்றில் பங்களிப்புச்செய்தமை தெரியவருகிறது.

தொழில் ரீதியாக ஈழநாடு பத்திரிகையில் தனது பதினைந்தாவது வயதில் நல்லூர் பகுதி நிருபராக இணைந்து உதவி ஆசிரியராக உயர்ந்து மொத்தம் பதினைந்து ஆண்டுகள் ஈழநாடு பத்திரிகையில் பயணித்திருக்கிறார். இதனால் பல எழுத்தாளர்களது அறிமுகம் இவருக்கு கிடைத்தது. அவர்களில் முக்கியமானவர்கள் மகாகவி உருத்திரமூர்த்தி, கீழ்க் கரவை பொன்னையா, காவலூர் ஜெகநாதன், சொக்கன், செங்கையாழியான், நா.கந்தசாமி, சில்லையூர்ச் செல்வன், மகாதேவன் மாஸ்ரர், கே.எஸ்.பாலச்சந்திரன் போன்றவர்களைக் குறிப்பிடலாம் இதனால் அவரது எழுத்துத்துறை மட்டுமன்றி பல மேடைகளில் நடிப்பு ஆற்றலும் மிளிர்ந்தன. கல்வியங்காடு அரியாலை போன்ற இடங்களில் உள்ள பல நாடக மேடைகளில் இவர் தோன்றியுள்ளார். இவரது முதலாவது நாடகமான "சாம்பிராட் அசோகனில்" தொடக்கி "உயிர் கொடுத்த உத்தமன்" வரை பல நாடகங்களில் பிரதான பாத்திரங்களை ஏற்று நடித்துள்ளார். பெண் வேடங்களைப் போடுவதிலும் இவர் பின்நிற்கவில்லை. கொக்குவில் தொழில்நுட்ப கல்லூரியில் கல்விகற்ற காலத்தில் முத்தமிழ் விழாவில் இவர் எழுதிய "தூது" என்ற கவிதைக்கும் "அலைகடல்" என்ற சிறுகதைக்கும் முதலிடம் கிடைத்தது. அரியாலையில் 60 வது சுதேசிய திருநாள் கொண்டாடத்தின் போது நடத்தப்பட்ட சிறுகதைப்போட்டியில் முதலிடம் பெற்றுக்கொண்டார். எனவே அவர் சிறந்த நடிகராக எழுத்தாளராக ஆசிரியராக இயக்குநராக ஓவியராக பல்வேறு பரிமாணங்களுடனேயே கனடாவுக்கு புலம் பெயர்ந்தார் . இடையில் சில ஆண்டுகள் இவர் மத்திய கிழக்கு நாடொன்றில் வாழ்ந்திருந்தாலும் அவரது முழுமையான கலைப்பணி இந்த மண்ணிலேயே இடம்பெற்றது.





கனடாவுக்கு சிறந்த கலைஞராக வந்த இவருக்கு டாக்டர் பிகராடோவினால் தயாரிக்கப் பட்ட "ஓட்டை" என்ற நாடகத்தில் நடிக்க வாய்ப்புக் கிடைத்தது. பின்னர் உதயன் பத்திரிகையின் இரண்டாவது ஆண்டுவிழாவில் சுந்தரேஸ்வரன் என்ற கலைஞரின் இயக்கத்தில் உருவான "சிதம்பரசக்கரம்" என்ற நாடகத்தில் மேடையேறினார். மது போதையுடன் சபையில் இருந்து "எக்ஸ்க்யூஸ்மி உங்களுக்கு ஏதும் பிரச்சினையோ" என்ற கேள்வியோடு மேடை யேறினால் போதும் எல்லோரும் மகிழ்ச்சிக் கடலில் மிதப்பார்கள். எந்தப் பிரச்சனையும் இன்றி அவரது மூளை மிகவும் தீவிர ஆற்றலுடன் நகைச்சுவை களைத் தந்துகொண்டிருக்கும். அங்க அசைவுகள் பார்வை நாடக நகர்வு இடமறிந்து செயற்படுதல் போன்ற சுவைகளை மிகவும் துல்லியமாகக் காட்டி விடுவார். ஒரு "நாடக சகாப்தத்தினை" தோற்றி வை-த்ததும் இவரே. கிட்டத்தட்ட இதுவரை 2500 நாடகங்களு-க்கு மேல் இவர் நடித்தள்ளார். டொரோண்டோ மார்க்கம் போன்ற நகரங்களைச் சுற்றி உள்ள நகரப் பாடசாலை களிலும் பல்கலைக் கழகங்கள் ஊர்ச்சங்கங்கள் பழைய மாணவர் சங்கங்கள் என்பனவற்றிலும் மிசாகா, பிரம்டன், ஒட்டாவா, கோன்வால், மொன்றியல் போன்ற நகரங்களிலும் இவரது நாடகங்கள் இடம் பெற்றுள்ளன. இவரது கலையுலக தாரகையாக "நவரசத் தாரகை" ரூபி. யோகதாசனும் இணைந்த வேளையில் மேலும் வளர்ச்சிபெற்ற கலைஞராகத்திகழ்ந்தார்.

இவரது நாடகப் பங்களிப்புக்கு அப்பால் திரைப் படத்துறையிலும் காலடி படைத்தார். கனவுகள், மனசு, " உறவுகள், அதிகாலை 26 போன்ற படங்களில் நடித் துள்ளார். 2002ம் ஆண்டும் 2004ம் ஆகிய ஆண்டுகளில் ரூபி.யோகதாசனின் தயாரிப்பில் உருவான கதிரொளி, கனேடியன் ஆகிய மனதைவிட்டகலாத படங்களிலும் நடித்துள்ளதுடன் உதவி இயக்குநராகவும் பணியாற்றி யுள்ளார். எந்தத்தொண்டுக்கும் சாயம் பூசக் கற்றுக் கொண்ட நம் தமிழ் மொழிமூலமாக பல்வேறு துறைகளையும் மீட்டவர் இவர்.

இவரது கவிதையாற்றலும் மிகவும் சிறந்த தொன்று. பல பத்திரிகைகளிலும் வானொலிகளிலும் தனது படைப்புக்களை காலத்திற்குக் காலம் தந் துள்ளார். இந்த வேளையில் தனது தமிழ் அறிவினை மேலும் வளர்க்கவேண்டி பாரிய வேலைப்பளுக்களு க்கு இடையேயும் இங்கு செயற்பட்ட மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகத்தில் பட்டதாரி வகுப்பில் சேர்ந்து இளங்கலை பட்டதாரியானார். R R CREATIONS மூலமாக பல கலைப்படைப்புக் களையும் உருவாக்கிய இவருடன் ரூபி.யோகதாசனும் இணைந்து 2005ம் ஆண்டில் கனேடியத்தமிழ் கலை ஞர்கள் சங்கம் என்ற ஒரு சங்கத்தை உருவாக்கி னார்கள். அதன் மூலம் ஆண்டுதோறும் நாடகப் பெரு விழா என்னும் ஒரு பெருவிழாவை கடந்த பதின் நான்கு ஆண்டுகளாக நடத்தி வருகிறார்கள் இதில் உள்ள மிகச் சிறப்பான அம்சம் ஒன்று உண்டு. இந்த நாடகமேடைக்கு எம்முடன் வாழ்ந்துகொண்டிருக்கும் கலைஞர்களின் பெயரையே சூட்டி மகிழுவார்கள்.



இவரது வானொலியூடான சேவை மிகப்பெரிய தொண்டு. இங்கு தற்போது நடைபெறுகின்ற கனடிய தமிழ் ஒலிபரப்பு கூட்டுஸ்தாபனம் (CTBC) கனேடியத் தமிழ் வானொலி (CTR) கீதவாணி, அனைத்துலகத் தமிழ் வானொலி (GTR) போன்றவற்றில் பலவிதமான பணிகளை ஆற்றியுள்ளார். கீதவாணியில் இவரது "தமிழ்க்குடில்", ரூபி.யோகதசனின் "குங்குமச்சிமிழ்", "அகரம் தமிழுக்கு சிகரம்" போன்ற தலைப்புக்களில் இங்குள்ள பாடசாலைகளின் பிள்ளைகளையும் எழுச்சி பெறச்செய்தனர். இங்குள்ள பல இசைக்கலைஞர்களை உருவாக்கிய பெருமை இவர்களுக்கே உண்டு. நீண்ட காலமாக இவர்களது வானொலியில் பாடல்களைப் பாடிவந்த வராகி விஜயராஜ், மயூரன் தனஞ்செயன், சுபவீன் பவானந்தன், அபிநயா பவானந்தன், அஸ்விகா குமரேஸ்வரன், குபேரகா குமரேஸ்வரன் போன்ற கலை ஞரகளை உருவாக்கிய பெருமையும் இவர்களுக்கு உண்டு. கீதவாணி வானொலியில் "ஒரு ஓவியம் காவியமாகிறது" என்ற நாடகத்தை 16 வாரங்களாக தொடர்ந்து நடத்திய பெருமை இவர்களுக்குண்டு. கீதவாணி வானொலி மூலம் "கதிரொளி" சேவையை தனித்துவமாக நடத்திவருகிறார்கள்.

நிகழ்ச்சித் தொகுப்பாளராக இவர் செய்த சேவையும் குறிப்பிடப்பட வேண்டியதொன்று. கணீர் என்ற குரலால் தொடர்ந்து பேசக்கூடிய ஆற்றல் அவருக்கு இருந்தமையால் பலரும் விரும்பி அழைப்ப துண்டு. இங்குள்ள பழைய மாணவர்கள் சங்கங்கள் பலவற்றில் பல கலை நிகழ்வுகளை நடத்திய வேளை யில் உரும்பிராய் இந்துக்கல்லூரி பொங்கல் விழா குழுவும் கௌரவிக்க விரும்பியது. மெகா பாட்டி ஹால் (MEGA PARTY HALL) உரிமையாளர் ஜெகன் அவர்கள் என்னை அழைத்து இவருக்குப் பொருத்தமான ஒரு பட்டம் சூட்டுவது பற்றி என்னுடன் ஆலோசித்தார். அப்பொழுது எந்த சலனமும் இன்றி எனது எண்ணத்தில் உதயமானதே "கலைவேந்தன்" என்பதாகும். "கலைவேந்தன்" கணபதி ரவீந்திரன் என்னும்போது நல்லதொரு கவர்ச்சித்தொனியுமானது உண்மையான உழைப்பும் திறனும் கொண்ட இவருக்கு இப்பட்டம் மிகவும் பொருந்திவிட்டது. இதே போன்று "கலைக்குரிசில்" என்ற பட்டமும் வழங்கப் பட்டுள்ளது. கலையின்றி வாழ்வு இல்லை எனும் இவர், இதுபற்றி அலட்டிக்கொள்வதில்லை. "நேர்மையான கருமமே உண்மையான கடவுள்" என்பதனை நம்பி னார். தனது தாயை பணிந்தே பேசத்தொடங்கினார். இன்றும் அவர் பணிதொடர்கிறது.

தொலைக்காட்சியில் தோன்றுவது இவரது அடுத்த பரிமாணம். TVIயினரின் வைத்திலிங்கம் நிகழ்வு. கே. எஸ் . பாலச்சந்திரனுடன் இணைந்து நடித்துள்ளார். தொடர்ந்து தமிழ் வன் (TAMIL ONE) தொலைக் காட்சி மூலம் "இது தாண்டா இம்சை" என்ற நகைச் சுவை நாடகத்தை பல ஆண்டுகளாக நடத்திவந் துள்ளார். ஒரு ஆணின் வெற்றிக்குப் பின்னால் ஒரு பெண் துணையாவது போன்று கணபதி ரவீந்திரனின் சகல முன்னேற்றத்திற்கும் ரூபி.யோகதாசன் உதவி வருகிறார். இணைந்து இவர்கள் நகைச்சுவைக் காட்சிகளில் தற்போதைய தமிழர் பிரச்சனைகள் குடும்ப நிலவரங்கள் இளையோர் படும் இன்னல்கள் முதியோர்களின் அவலங்கள் எல்லாமே வரும் அற்பு தமான இந்த தலைப்பு மூலம் இவர்களது நடிப்புத் திறன் பலரது உள்ளத்தினையும் மாற்றிவருகிறது.





இந்த மண்ணில் இருந்து சென்று ஐரோப்பிய நாடுகளிலும் தமது கலையாற்றல்களை இருவரும் வெளிப்படுத்தி திரும்பினர். கொழும்பில் தமிழ்ச் சங்கத்தில் இவர்கள் இருவரும் கௌரவிக்கப்பட்டனர். அங்கும் இவர்களது நகைச்சுவை நாடகமும் இடம்பெற்றது. ஐரோப்பிய பயணத்தை ஒரு பயணக்கட்டுரையாக உதயன் பத்திரிகையில் வெளியிட்டபோது மிகவும் வியப்பூட்டுபவைகளாக அமைந்தன. வெறுமனே கலை மட்டுமன்றி தாம் கண்ட பல நிகழ்வுகள், கட்டிடங்கள், காட்சிகள் என்பவற்றினை தத்ரூபமாக எழுதியிருந்தார். நாமும் ஐரோப்பாவுக்கு சென்று திரும்பிய உணர்வே அதில் மேலோங்கி நின்றது.

தனக்கொரு முன்னோடி எவரும் இல்லாது தனித்து நின்று நாடகமேடைக்கோ திரையுல குக்கோ கவியுலகிற்கோ பேச்சு மேடைக்கோ அறிவிப்பு துறைக்கோ மழலையரின் உலகுக்கோ அவர் செய்த சேவை அளப்பரியது. அவரது பா-திப்பு இன்றி எதுவும் நடைபெறாத அளவுக்கு மழலை முதல் முதியோர்வரை அவரை நன்கு தெரிந்து வைத்திருக்கின்றனர். வீடு விற்பனை முகவர் முதல் வைத்தியத்துறை யினர் வரை அவருடன் தொடர்புகொண்டிருந்தனர் இத்தகைய அவரது ஆளுமைக்கு முக்கிய காரணம் இவரது எளிமையும் பணிவுமேயாகும்.

“தமிழுக்கு தொண்டு செய்வோர் சாவ தில்லை” என்ற பாவேந்தரின் வரிகளுக்கும் “திறமைக்கு வணக்கம் செய்தல் வேண்டும்” என்ற பாரதியின் வரிகளுக்கும் மிகவும் பொருத் தமாகி நிற்பவர் கணபதி ரவீந்திரனாவார். தாய் நாட்டுப்பற்று மொழிப்பற்று கலைப்ப்று என்பவற்றுடன் கூடிய அவரது நுண்ணறிவுச் சிந்தனை இந்த அளவுக்கு அவரை உயர்த்தி யுள்ளது என்றே கூறவேண்டும். ஆங்கிலம் பேசும் நாடொன்றில் தொடர்ந்தும் எமது நாக்கு தமிழ்பேச, ஆங்கில உச்சரிப்புக்கொள்ளும் மழலைக்கு வணக்கம் சொல்ல வாய்திறந்து இசைக்காத இளையோர்க்கு இசைக்க வைக்க சிரிக்கவே தெரியாத பலரைச் சிரிக்க வைக்க இவர் பட்டபாடுகள் பல அவரது வாழ்வுக் காலம் 50 வருட சேவைக்காலம் தொடர்ந்து வளம் பெற எமது தமிழர் வாழ்த்தவேண்டும்

**“சிந்தனைப் பூக்கள்”**
**பத்மநாதன்**

# ஊக்கமருந்தாய் உன் நகைப்பேச்சு!




கணபதி தம்பதியின் கருவில் உருவாகி
கனடியத்தமிழர் தம் கலையில்
கலைத்திலகமாய் நகைச்சுவை நாயகனாய்
கலைச்சேவையில் அரைநூற்றாண்டு கடந்து
கால்பதிக்கும் கணபதி ரவீந்திரா.

ஆண்டவன் கருணையால் அகவை
ஆறுபத்து ஐந்தும் கடந்து
ஆற்றலால் அகத்தில் அனைவருக்கும் - நீ
ஆறுதல் மொழி கொஞ்சும் மழலை
ஆறுபத்தாண்டுகள் மேலும் வாழ்க.

ஊடகத்தில் உன்னதமாய் உன் பணிகள்
ஊக்கமுடன் நேயருக்கு நோயகற்றும்
ஊக்கமருந்தாய் உன் நகைப்பேச்சு
ஊமையாகிபோகுது உள்ளத்தின்
ஊனமான கவலையனைத்தும்.

நல்லூரில் நல்லம்மாள் பையூரில்
நவரச நாயகனாய்அவதாரம்
நடிப்புக்குள்ளே நகைச்சுவையுடன் வகையாய்
நவீனம் புகுத்தி மனப்புகை நீக்கி
நவகவியாய் நல் எழுத்தாளனாய் பலபரிமாணி.

பலரின் வயிறுகுலுக்கி சிந்தனைகிளரும்
பலபரிமாண வரிகள் உனக்குள்ளிருப்பினும்
பலதுயர்கள் வலிகள் தாங்கி உள்வாங்கி
பலமான இதயமுடன் பலவீனம் மறந்து
பலரையும் ஆற்றுப்படுத்தும் உளவியலாளன்.

அன்புடன் ஆரோக்கியமாய் இன்புறவே
ஈழமக்கள் உறவுகள் ஊருலகு போற்றிட
எதிலும் ஏற்றமுடன் ஐயுணர்வு மெய்கலந்து
ஒள்ளியராகி (அறிவில் சிறந்து) ஓம்கரன் துணையோடு
ஔடதம்நீங்கி அஃதே வாழ்க வளமுடன்.



**கவியாக்கம்**
**டாக்டர். போல் ஜோசேப்**

# கலைவாழ்வின்
# அரை நூறு
# கணபதிக்கு
# இரு நூறு

பனிச்சிறைக்குள் பாலைவனம்
பகலிரவாய் மாறிவரும்
இருக்கின்ற பொழுதுக்கு
இரு கைகள் போதாமல்
பொழுதை இரட்டித்து
பொருள்தேடும் நம்மவர்கள்
சிரிப்புக்கு என்ன
சில்லறையா தருவார்கள்

இருப்பு குறையாமல்
இருப்பதற்கே இரவு பகல்
சிரிப்பை மறந்த பலர்
சிந்தனைக்கு மருந்தாக
சிரித்து மகிழ- தன்
சில்லறைகள் செலவு செய்து
நகைச்சுவையில் விருந்துவைத்தான்

குறும்பன் இவனென
குறைகாண பலபேர்கள்
விரும்பும் அனைவர்க்கும்
கரும்பின் அடி தெரியும்
உள்ளத்து உதித்ததுவை
உரத்துரைக்கும் உயர் கலைஞன்
பள்ளத்தில் விழுந்தாலும்
பக்கத்தில் உள்ளவரின்
குள்ளத்தனத்தினிலும்
குழிபறியா குணத்தனிவன்
ஈழத் தமிழ்க் குலத்தின்
இனியதமிழ் பற்றாளன்
இருநூறு வயதுக்கும்
இணையான இவன் வாழ்வில்
இனியமகள் ரூபி எனும் கலையரசி
கலைக்களத்தில் கைகோர்த்து
கனமான காலமிவன்
கலை செய்தான்
கணபதிதான்
ஒரு கலைவேந்தன்

சு. விவேகானந்தன்

PROMAR

# கலைவேந்தன்

# கணபதீ ரவீந்திரன்



என் இனிய நண்பன் திரு. கணபதி ரவீந்திரன் அவர்களை, ரவீ என்று பாசத்தோடு அழைப்பேன். எண்பது கோடி மக்கள் பேசுகின்ற எம் தாயினும் இனிய குடகுத்தமிழ் மொழியில், வி என்ற இடையின குறில் எழுத்தை, வீ என்று அன்புக்காக நெடிலாக்கி, ரவீ என்று நான் அழைக்கும் போது, எப்போதும் அவரிடமிருந்து சிரிப்பு முதலிலும், பதில் பின்னரும் வரும்.

இடையினம் என்பதை இங்கே சுட்டியதற்கும் காரணம் இருக்கிறது. நண்பன் ரவீ, வல்லினத்திலோ மெல்லினத்திலோ சேரவல்லர் அல்ல. திடீரெனக் குதிப்பார், படீரெனப் பாசத்தைக் கொட்டுவார், தடாலெனத் தகதகப்பார், மறுகணமே அனைத்தையும் மறந்து, நல்லின நண்பனாக மாறிவிடுவார். தி என்ற எழுத்து தீ ஆக மாறியதற்கும் அதுதான் காரணம். நண்பன் ரவீ ஒரு தீ. கவிதையில், எழுத்தில் தமிழறிவில், பேச்சில், அறிவிப்பில், நடிப்பில், நட்பில், பாசத்தில், ஒரு தீ. அத்துடன் கோபத்திலும் தீ. அன்பென்ற தண்ணீர் தெளித்தால் பெட்டிப்பாம்பாக அடங்கிவிடும் அதிசயப்பிறவி இந்தத் தீ.

எனது நண்பனுக்கு கலைதான் உயிர், கலைதான் உணவு, கலைதான் வாழ்வு. கலை என்று வந்துவிட்டால் அது, நாடகம், கவிதை, பேச்சு என்று எதுவாக இருந்தாலும், அமெரிக்காவோ, கியூபெக்கோ, மொன்றியலோ, வாட்டர்லூவோ, ஐரோப்பாவோ எந்த உலகமாக இருந்தாலும், தனது உடலுள வருத்தங்களையும் சிரமங்களையும் பாராது, இரவு பகலென்று பாராது, தனது செலவிலேயே பயணம் செய்து அந்தக்கலைக்கு நீதி வழங்கி விட்டுத் திரும்பும் ஒரு கலை தளபதி இவர். சிறுநீரக மாற்று சத்திரசிகிச்சை நடைபெற ஏற்பாடாகியிருந்த மிகச்சிக்கலான உயிராபத்துள்ள காலத்திலும்கூட கலைக்கு முதலிடம். ஆரோக்கியத்திற்கு இரண்டாமிடம் என்று புதுக்கணக்குக்கூறிய கலைஞானி இவன்.



கீதவாணி வானொலியில் நான் கவிச்சரம் என்ற கவிதை நிகழ்ச்சி வழங்கிய காலத்தில், ஒரு நேயராக இணைந்து, என்னைக்கவர்ந்து, எண்ணற்ற நேயர்களின் நெஞ்சங்களைக் கொள்ளையிட்டு, என்னோடு ஒருவனாக வானொலிக்கலைஞனாகி, இன்று நானே அண்ணாந்து பார்க்கும் ஒரு வானொலிக்கலைஞனாக பரிணாம வளர்ச்சி கண்டுள்ள இந்த வானலை தீயை பார்த்து, ஒரு நண்பனாக மகிழ்கிறேன். சேர் ஜோண் ஏ மக்டொனால்ட் கல்லூரிக் கலையரங்கில், ரவீ வழங்கிய "சிதம்பர



சக்கரம்" என்ற நாடகத்தின் முதலாவது படைப்பை, மண்டபத்திலிருந்து ரசித்ததும், ரவீயின் இயற்கையான நகைச்சுவை நடிப்பைப்பார்த்து பிரமிப்புடன் பாராட்டி மகிழ்ந்ததும் இன்றுவரை என்னால் மறக்கமுடியாத இனிய ஞாபகங்களாக மனதில் நிழலாடுகின்றன.

கனடாவிற்கு வருவதற்கு முன்பே, இலங்கையில் பல மேடைகள் கண்ட புகழ்பெற்ற கலைஞனும் பேச்சாளருமான என் நண்பன் ரவீ, இன மத மொழி வயது எல்லாவற்றையும் கடந்த ஒரு அற்புத ஜீவன். புத்தன், இயேசு, முருகன், அல்லா என்றோ, ஏனைய வேற்றுமைகளையோ கருத்திலெடுக்காமல், கலையை நூறுவீதம் கலை யாகவே மதிக்கும் அன்பன். கனடா திருமறைக் கலாமன்றம் தயாரித்து வழங்கும் பாரிய "பலி-க்களம்" வரலாற்று நாடகத்தில் என்னோடு இணைந்து நடித்த ஞாபகங்கள், வெளிக்கள நிகழ்வுகளை இருவரும் இணைந்து வானொலியில் தொகுத்து வழங்கிய நினைவுகள், வானொலியில் ஒன்றாக கலை, இலக்கிய, கவிதை, நகைச்சுவை, கலந்துரையாடல் நிகழ்வுகளைத் தொகுத்து வழங்கிய சுகந்தமான எண்ணங்கள் என்று ஏராளமானவை என் மனத்திரையில் நிழலாடுகின்றன.

கலையுலகில் 50 ஆண்டுகளை நிறைவு செய்வது என்பது, கணபதி ரவீந்திரனைப் பொறுத்தவரை, 150 ஆண்டுகளை நிறைவு செய்வதற்கு நிகரானது. வாராவாரம் மேடையேறும் ஒரு நடிகர், தினமும் கலையிலேயே வாழும் ஒருவர். மேடையின் அளவு, பார்வையாளரின் எண்ணிக்கை, மண்டபத்தின் தோற்றம், ஒலிவாங்கி இருக்கிறதா இல்லையா என்பதையெல்லாம் பொருட்படுத்தாத ஒரு பிறவிக்கலைஞர் என் நண்பர் ரவீ. இருப்பது இருபது பேராக இருந்தாலும், அவர்களை வயிறு குலுங்க சிரிக்க வைக்கவும் அல்லது குலுங்கிக் குலுங்கி அழவைக்கவும் அல்லது ஆழமாக சிந்தித்து ரசிக்க வைக்கவும் முடிந்த அதேவேளை, இந்த மூன்று வடிவத்தையும் ஒரே நிகழ்வில் ஒன்றாக வழங்கிவிடக்கூடிய ஒரேயொரு கலைஞனாகவும் ரவீ என்ற ஒருவரையே என்னால் அடையாளம் காட்ட முடியும்.

மூத்தோர் முதியோரை மதிப்பது இளைய தலை முறையினரை ஊக்குவிப்பது, சிறுவர்களைப் பாராட்டுவது, தாய்மையையும் பெண்ணியத்தையும் கண்ணெனப் போற்றுவது என்று ஏராளமான விடயங்களை விதந்துரை க்கலாம். விதந்து பாராட்டி மகிழ இந்த இனிய நண்பனிடம் இன்னும் நிறையவே விடயங்கள் இருந்தாலும், இந்த நூலில் தங்கள் வாழ்த்தையும் இணைக்க ஆசைப்படும் பல ஆயிரம் உள்ளங்களின் உணர்வை மதித்து, இத்துடன் நிறுத்திக் கொள்கிறேன்.

என் இனிய நண்பர் ரவீ, என்றும் நலமாக வளமாக மகிழ்வாக வாழ, உளமார வாழ்த்தி அமைகிறேன்.

**குயின்ரஸ் துரைசிங்கம்**



'கலைவேந்தன்' கணபதி ரவீந்திரன்

எனக்கு இவருடன் திரைப்படம் மூலமாகத்தான் தொடர்பு. முதலில் ஓட்டை என்றொரு நாடகத்தில் நாங்கள் நடித்திருந்தாலும் திரைப்படம் எடுக்கும்போதுதான் நெருக்கம். நாடகத்துறையில் இவர் கொடி கட்டிப்பறந்தாலும் திரைத்துறையும் இவருக்குள் உறங்கிக்கொண்டிருந்த ஒரு திறமை. நாடகத்தில் வசனங்களை தடக்காமல் தொடர்ச்சியாக பேசக்கூடியவர். நாடகம் பார்ப்பவர்களை நாடகம் ஆரம்பித்து ஒரு சில நிமிடங்களிலேயே தன்வசம் இழுத்து வைத்திருக்கும் சக்தி இவரிடம் நிறையவே உண்டு. இவருக்காகவே கனடாவிலும் பிறநாடுகளிலும் இரசிகர்கள் நிறையவே இருக்கிறார்கள்.

இவரின் சில நாடகங்களை திரையில் கொண்டுவந்தால் என்ன என்று ஆரம்பித்தபோது திரைப்படம் தயாரிக்கலாம் என முடிவானது. 2003ல் கதிரொளி என்ற பெயருடன் 4நாடகங்கள் திப்படமாக வெளியானது. முதன்முதலில் செட் போட்டு படமாக் கியிருந்தோம். மிகப்பெரிய வரவேற்பையும் பெற்றது. பின் கனேடியன் என்ற பெயரில் இரண்டாவது படம். இதுவும் இவரின் இரசிகர்களால் பார்த்துப் பாராட்டப்பட்டது. இவர் படப்பிடிப்பில் கலந்துகொள்ளும் போது மற்ற நடிகர்களும் குஷியுடன் தான் இருப்பார்கள்.அவ்வளவு கலகலப்பாக இருக்கும். நகைச்சுவைக்குப் பஞ்சமிருக்காது. இடைக்கிடை 'ரவி நிறைய லைட் போட்டு என்னை வெள்ளையா காட்டவேணும்' என்பார் 50 வருசத்துக்கு முன் நான் ஊரிலை முதலிலை கண்ணனாய் நடிச்சனான். சனமெல் லாம் எழும்பி நிண்டு கைதட்டினதுகள். எண்டு சொல்லியிருக்கிறார். (தொடர்ந்து கதிரையில இருக்க நாரி நோகுது எண்டு சனம் எழும்ப இவர் தனக்கெழும்பினது எண்டு நினைச்சிட்டார் போல...) கண்ணன் நீலமெல்லோ இதென்ன இந்தக் கண்ணன் கறுப்பாய்க் கிடக்கு எண்டும் ரண்டொரு பேர் கதைச்சிருப்பினம்...சரி அது இருக்கட்டும்.

படப்பிடிப்புக்கு நேரத்துக்கு வரமாட்டார். வந்துவிட்டால் சுறுசுறுப்பாய் தன் திறமையை காட் டுவார். படப்பிடிப்பு இடத்திலேயே காட்சிக்கு தகுந்த வசனங்களை எழுதுவதில் கெட்டிக்காரர் இவர் தயாரித்த இரண்டு படங்கள் இவரால் இயக்கப்பட்டவை.

இப்போது கலையுலகில் 50வருடங்களை நிறைவு செய்யும் நிலையில் புதிய திரைப்படம் ஒன்றை நீண்ட இடைவெளிக்குப்பின் இயக்கவுள்ளார். நான் மறுபடியும் இந்நப்படத்தில் பணியாற்ற கேட்டிருக்கிறார். மறுபடியும் இவருடன் இணைந்து பணியாற்றுவதில் மகிழ்ச்சி. 50வருட கலைப்பணியை பாராட்டி வாழ்த்துவோரில் நானும் ஒருவனாக நின்று வாழ்த்துவதில் அக மகிழ்கிறேன். வாழ்க பல்லாண்டு. வாழ்க வழமுடன்.

அன்புடன்

ரவி அச்சுதன்

யாழ் மண்ணில் சூல் கொண்டு
கனடாவில் வாழ்கின்ற...
பார் போற்றும் நல்வேந்தே...! - நீ
கணபதி ரவீந்திரன் எனும்
கலைவேந்தன்...!

முத்தமிழின் சாறெடுத்து - உன்
மூச்சுக் காற்றாய் சுவாசித்து...
எழுத்துக்களில் காவியங்கள்
எழுதி எழுதிப் படைக்கின்றாய்...!

தெள்ளுத் தமிழ்ச் சொல்லெடுத்து
தெவிட்டாமல் ஒலிக்கின்றாய்...!

கன்னித்தமிழைச் சுவைக்கின்றாய்...!

செம்மாந்த நடைதனிலே
தமிழ்த்தேனை - எங்கள்
செவிகளிலே ஊற்றுகின்றாய்...!

அடர்த்தியானச் சொற்கட்டில்
ஆய்ந்து ஆய்ந்து - நீ
கொடுக்கின்றாய்...!

வானலையில் - உன் குரலொலியில்
வளைத்துத்தான் போடுகின்றாய்...!
வண்ணத் தொலைக்காட்சியில்
வாஞ்சையுடன் பேசுகின்றாய்...!

உவகையிலே சிலிர்க்கின்றோம்...
உன் ஐம்பதாண்டு பொன்விழாவை
ஆர்ப்பரித்துக் கொண்டாடுகின்றோம்...!
பல்லாண்டு பல்லாண்டு
பல்லாயிரத்தத்தாண்டு நீ

வாழிய வாழியவே...!

- ரஜினி நேசன் -









# GANAPATHY RAVEENDRAN CELEBRATES 50 YEARS OF DEDICATION TO ART AND CULTURE



**S. Raymond Rajabalan B.Sc (Hons) Cey**
**Free-lance writer**
**The Monsoon Journal and The Srilankan Anchorman**

Canadian Radio ariste Announcer at Kathiroli Radio, famous playwright, versatile Poet and prolific writer co pletes his 50 years of experience this April .Incidentally his birthday falls on April 22 and as he celebrates his milestone Birthday, he officially becomes a senior citizen of Canada. Hailing from Jaffna Raveendran had his early education at Stanley College, Senguntha Hindu College .

He gratefully acknowledges that he owes his success to his beloved parents Sinniah kanapathypillai and Nallamma. He has a special affection for his mother and has fond memories of her. It was his mother who first noticed his aptitude for art and was amazed at his life like drawing of a squirrel eating a fruit at the tender age of three. The overjoyed mother then dashed out of her house and showed it to her relatives and neighbours with justified pride. Since then she kept on encouraging him to continue his interest in art while also constantly reminding him of the value of Education.

Every time Raveendran, known affectionately as Ravi by his devoted listeners begins a program in Kathiroli Radio he plays the song "Aaaththaa on sealai", expressing his deep gratitude for his mother. This song has now become his trade mark. Earlier when he was an anchor at Geethavaani Radio he used to frequently play a yet another popular song "Ammavenralikkatha Uyir Illaye", which too praises the virtues of a mother. Encouraged by his mother's support, Ravi began to devote considerable time in creating drawings that made him a popular figure in his neighbourhood. Ravi still also embers with deep respect about his elder brother Thillainathan who too was an excellent artist and was this source of inspiration to develop a great interest in drawing.



While he was a student at Kanagaratnam M.V (Stanley College) , one day he drew a portrait of the History Teacher Mrs.Thambiah. Amazed by the creativity of this talented student she invited Ravi to her residence and introduced him to her relatives. Mr.Rajaduraii who was the Principal of the school at that time also took great interest in Ravi's artwork.

When one day Ravi drew a picture of Goddess Saraswathy and took it to the principal who was highly impressed by his talent. Later when the centenary celebration of the scholar and religious reformer Arumuga Navalar was held at the school, a life sized drawing of this great scholar drawn by Ravi was exhibited at the college entrance for a number of days. Ravi still remembers this incident as the greatest honour he ever received.

Later while pursuing his studies at Sengunthа Hindu College, the art teacher at that time Mrs, Yogarani Rajaratnam organized an Exhibition. As expected it was Ravi who won the first prize for his drawing of Mahatma Ghandhi. It should be noted that this drawing was created by collage art that is based on using many materials including clippings from various newspapers and magazines.

Whenever he had free time Ravi was always involved in drawing portraits of great men and famous world leaders such as Araham Lincoln, Jawaharlal Nehru, Majatma Ghandhi etc. There used to be a huge fruit tree in front of his residence. Once he a drew a 10-foot portrait of the great Bolywood actor Sivagigi Ganeshan and attached it to that tree. Ravi still remembers the scores of people who flocked to his house to admire his art work.

During his period of stay in Colombo, he drew a sketch of Melvin John, the founder Lions club at the request of the management of Wellawatte Lions club. That proved to be the crowning glory of his art career. When the drawing was auctioned it was bought by Kotahena Lions Club for the then princely sum of Rs.15,000.

Ever since he moved to Canada nearly a 25 years ago while being employed full time at manufacturing establishment he has been active in numerous producing stage plays in addition to pursuing his interest in organizing cultural programs.



He takes great interest in promoting the learning of Tamil language by the younger generation and arranges several radio programs for the children .Ravi has also been promoting several young Tamil Canadian singers and constantly encourages them. During the past two decades he has interviewed scores of scholars from various parts of the globe and earned their respect. Ravi has received several awards for his dedicated service and has been honoured at various cultural events in Canada. It is an undeniable fact that he is an asset to the Canadian Tamil community.

**S. Raymond Rajabalan B.Sc (Hons) Cey**
**Free-lance writer**
**The Monsoon Journal and The Srilankan Anchorman**

# கலைப்பணி வாழ்வில் பொன்விழாக் காணும் கலைவேந்தன் கணபதி இரவீந்திரன் அவர்களை வாழ்த்தி வழங்கிய அன்புப்பாமடல்

நாடகக் கலையின் வேந்தன்
நற்றமிழ்ப் பாவின் ஏந்தல்
மாடமார் உரையின் மைந்தன்
வானொலி பரப்பின் தங்கம்
தேடரும் மக்கள் வண்ணன்
சொல்லரும் மனித நேயன்
ஏடவன் கணப திக்கெம்
இதயத்தால் வாழ்த்துச் செய்தோம்!

யாவர்க்கும் மனித வள்ளல்
யந்திரம் போலே விள்ளும்
சேவைக்கு நோயே இல்லான்
சிரிப்புக்குப் பஞ்ச மில்லான்
கோவைக்குக் கிளியே போலும்
கொஞ்சிடும் தமிழே அன்னான்
நாவைக்கும் பேச்சி னுள்ளே
நாதமே யாவான் அம்மா!

நீரகம் நிறுத்தக் கண்டும்
நேயிழை கொடுத்த பின்னும்
ஊரிலே மீண்டுங் கொண்ட
உயிர்ப்பொடும் பிறந்தான்! அந்தப்
பேரொடும் அறுபத் தைந்தும்
பொற்புறும் ஊட கத்தே
காரொடும் ஐம்ப தென்ற
கணக்கிலே வருடம் பெற்றான்!

சொல்லிலே குளிர்மை பெற்றான்
சிரிப்பலே வனப்புத் தந்தான்
முல்லையின் மலரே யன்னான்
மூத்தவர் விரும்பும் தெய்வ
நல்லையாய் இருப்புப் பெற்றான்
நம்பியாய்க் கணப திக்கே
சொல்லியே வாழ்த்து கின்றார்
சிறப்பிது தானே! வாழ்க!

மனதினை வரிக்கும் காந்தள்
வானொலி யார்க்கும் நேயன்
தனமெனக் கண்டான் இல்லை
தமிழெனத் தொழுதான் கண்டீர்!
இனமென நிற்குஞ் சோலை
இளமுரு கவனே போலும்
கனலுறுங் காற்றை வைத்தான்
கணபதி வாழ்க! வாழ்க

கலைவேந்தன் கணபதி ரவீந்திரன் அவர்களுக்கும், அவர்க்கு நீரகம் வழங்கிச்சிறப்பித்த ரூபி யோகதாசன் அவர்களுக்கும் வாழ்த்துக்களைக் கூறி வாழ்த்தும்...

**தேசபாரதி தீவகம்**
**வே. இராசலிங்கம்**





இலங்கையில் ஊடகத்துறைக்கென உயர்கல்வி நிறுவனங்களோ, பல்கலைக்கழகங்களோ இல்லாத நாட்களில் யாழ்ப்பாணம் ஈழநாடு நிறுவனம் ஊடகத்துறைக்கான பல்கலைக்கழகம் போன்று இயங்கி வந்திருக்கிறது என்பது மறுக்க முடியாத உண்மை. யாழ் ஈழநாடு பல்கலைக்கழகத்தில் பயின்ற பலர், இன்று கொழும்பில் இருந்து வெளி வரும் ஆங்கில - தமிழ் ஊடகங்களில் மட்டுமல்லாது, புலம்பெயர் நாடுகளிலும் இயங்கிவரும் ஊடகங்களில் கோலோச்சி வருவது கண்கூடு. இங்கிலாந்து, பிரான்ஸ், கனடா, ஒஸ்ரேலியா உட்பட பல்வேறு நாடு களிலும், யாழ் ஈழநாடு பல்கலைக்கழகத்தில் பயின்ற, பணியாற்றிய பலர், ஊடகங்களைக் கட்டி ஆண்டு கொண்டு இருக்கிறார்கள் என்பது, நிச்சயம் வார்த்தை ஜாலம் அல்ல. கொழும்பு நகருக்கு வெளியில் இருந்து வெளிவந்த இலங்கையின் பிராந்திய, அதுவும் தமிழில், அதுவும் யாழ்ப்பாணத்தில் இருந்து வெளிவந்த முதலாவது தினசரி யாழ்ப்பாணம் ஈழநாடு தினசரிப் பத்திரிகை என்ற பெருமைக்குரிய ஊடகத்தில் பணி யாற்றிய அனைவருமே வரலாற்று நாயகர்கள்தான்.

கொழும்பில் இருந்து இன்றும் வெளிவந்து கொண்டிருக்கும் ரைம்ஸ் ஒவ் சிலோன் (Times of Ceylon) நிறுவனத்தின் பணிப்பாளர் குழுவில், 1950களில் பணியாற்றி வந்த அமரர் கே.சி.தங்கராசா அவர்களின் எண்ணக்கருத்துக்கு அமையவே அவருடைய நண்பர்கள் மற்றும் உறவினர்களின் பங்களிப்புடன் யாழ்ப்பாணத்தில் ஈழநாடு பத்திரிகை உருவாகியது. யாழ்ப்பாணம் ஈழநாடு பல்கலைக்கழகத்தில் பணியாற்றி யவர்களில் ஒருவரான கணபதி ரவீந்திரனுக்கு, அந்த நிறுவனத்தில் பெற்றுக்கொண்ட அனுபவமே, ஊடகவியலாளர் என்று நிலையில் இருந்து கலைஞர் என்ற நிலைக்கு இட்டுச்சென்றது. கனடா, ரொறன்ரோ நகரில், கலைப்பணியில் ஈடுபட்டு வரும் தம்பி கணபதி ரவீந்திரன் பல்வேறு பரிணாமங்களுடன் தமது திறமைகளை வெளிப்படுத்தி பொன்விழா காணும் நிலையை எட்டியுள்ளார். புலம்பெயர்ந்து கனடாவில் வாழ்ந்துகொண்டு ஈழமண்ணுக்குப் பெருமை சேர்ப்பவர்களில் ஒருவராக கணபதி ரவீந்திரனும் இன்று திகழ்ந்து கொண்டிருக்கிறார். கணபதி ரவீந்திரனின் அபரிமிதமான வளர்ச்சி அவரை ஊடகத் துறையில் வளர்த்து விட்ட யாழ்ப்பாணம் ஈழநாடு நிறுவனத்துக்கும் பெருமை சேர்க்கிறது.

ஈழநாடு பத்திரிகையில் எம்முடன் சில காலம் பணியாற்றிய கணபதி ரவீந்திரன், கலைத்துறையிலும் ஊடகத்துறையிலும் மேலும் மேலும் பரிணமிக்க வேண்டும் - பரிணமிப்பார் என்ற பூரண நம்பிக்கையுடன் அவரை வாழ்த்துவதில் உவகை கொள்கின்றேன். தமிழ் கூறும் நல்லுலகின் வானபரப்பில் ஜொலிக்கும் நட்சத்திரங்களில் ஒன்றாக, தம்பி ரவி எப்பொழுதும் பவனி வருவார் என்பதிலும் சந்தேகமில்லை. அவரை மீண்டும் மீண்டும் இதயத்தால் வாழ்த்திக் கொண்டே இருக்கின்றேன்.

**இரத்தினம் கந்தசாமி**
யாழ்ப்பாணம் - பாரிஸ் ஈழநாடு
பாரிஸ் ரிஆர்ரி, ரிரிஎன்,
லண்டன் தீபம் தொலைக்காட்சிகள்



# கலையுலகின் கதிரொளி

அன்னைத் தமிழின் அருங் கலைஞன்
எழுத்துலகிலும் கலையுலகிலும்
பொன்விழாக் காணும் கலைஞன் - இவன்
பெருமை பெற்ற கலை ஞானிதன்!

தமிழ்த் தாயின் தவப்புதல்வன் கணபதி
தன்னிகரில்லா கலைத் துறையில்
திறமை மிக்க கலைவேந்தன் - இவன்
தடம் பதிக்கா துறை யேது!

வானொலி தொலைக்காட்சி நாடகம்
திரைப்படம் பத்திரிகை ஊடகம் சந்திப்பு
நிகழ்வுகளின் நேரடி வர்ணனை என - கலைமகளே
பாராட்டும் பல நூறு கலைபடைத்தவன்!

கல்விக்கு கரையேது வயதேது - என
கனடாக் கல்லூரியில் கலைமானி பயின்றவன்
எழுதுகோலும் தாளுமின்றி கண்ணிமைக்கும்
நேரமதில் கவிபல புனையும் கவிஞனிவன்!

தொடர் நாடகப் பெருவிழா படைத்த பெருமகன்
சமூக அவலங்களை இயல்பாய் தருபவன்
"மரணத்தின் பின்" யாரும் காணாக் காட்சியதை
"தன் மரணத்தை" கண்டு களித்த நடிகன்!

முதியோர் தொட்டு சிறியோர் வரை - தன்
நகைச் சுவை பேச்சால் தன்வசமாக்கியவன்
அறிவால் ஆற்றலால் ஆளுமையால்
எண்ணற்றவர்களின் உள்ளங்களில் வீற்றிருப்பவன்!

எளிய தோற்றமே இயல்பென இருப்பவன்
பணத்தில் பொருளில் பற்றற்று இருப்பவன்
தன்னம்பிக்கையை கைவிடா கலைஞனிவன்
உயர்ந்தோர் பெருமை உவந்து புகழ்பவன்!

வாழ்வும் வளமும் கலைக்கென அர்ப்பணித்த
பெருமை பெற்ற பொன்விழாக் காணும் நாயகனை
வாழும் காலத்தில் வாழ்த்துவதில் பெருமை
காலமெல்லாம் கலையோடு மகிழ்வோடு
பல்லாண்டு காலம் வாழ்க வாழகவே!



அன்புடன்
**திருமதி வனிதா இராஜேந்திரம்.**

Since 2017

UTHAYAM CULTURAL ASSOCIATION OF CANADA
உதயம் கலாச்சாரச்சங்கம்–கனடா
1300-A, Bloor St. West, Toronto, M6H-1N9
UCA of C E-Mail: uthayan.canada@gmail.com. Reg.No: 1027379-1

கலைவேந்தன் கதிரொளிநாயகன் 07/04/2018

---

ஈழநாட்டில் வளர்ந்த முத்து
தன் சமூக வாழ்க்கையை
ஈழநாடு பத்திரிகையில் ஆரம்பித்த
பயணத்தின் மூலம் நாடகம், கவிதை, கட்டுரை
சமூக சீர்திருத்தமென உயர்த்த கணபதி...
பல தடைகளையும் தாண்டி
ஒவ்வொரு படிகளையும்
போராடி போராடி வீரநடைபோட்டு
கடின உழைப்பின் செழுமையால்
அதில், வெற்றிகண்டு
தொடர்ந்த வெற்றிநாயகன்

பின்னர்
ஈழநாட்டின் வாழ்க்கை போராட்டத்தின்
சூழ்நிலையால் - போர் நிலையால்
நாட்டைவிட்டு நாடு தாவி
இடம் பெயர்ந்து
கனடா மண்ணில்
கால் பதித்ததைத்தொடர்ந்து,
பலர் கவனத்தை ஈர்த்து நாடகங்கள்
எழுத்துக்கள் - கவிதைகள்
போன்றவற்றால், பலரது
கவனத்தை சேர்த்த போது
தன்னகத்தே ஒரு இரசிகர் பட்டாளத்தையே
உருவாக்கி மக்கள் தொடர்பால் ஈர்க்கப்பட்ட
நாயகன் மறுபடியும்....

விவேகத்தில்,
பல வானொலிகளில் -தனது
கம்பிரமான குரல்களை பதித்து,
தனக்கெனவொரு
வானொலியைத்தொடங்கி -அதில்
கதிரொளி நாயகனாகத் திகழ்ந்து
கனடிய மக்கள் மனத்தைக் கவர்ந்து,
அதையையே பற்றிக்கொண்டு
நடைபயிலும் தருணத்தில்,
தனது 50 வருட எழுத்துச்சேவையையும்
65வது பிறந்தநாளில் பொன்விழாவையும்
ஒருங்கமையைக்காணும் கணபதியை
பணிவுடன் போற்றவேண்டிய
தருணமென்பதை எங்கள் சார்பாக
மகிழ்வுடன் தெரிவித்துக்கொள்வதில்
மனமகிழ்சியில் திளைக்கின்றோம்...!

| Nallanathan Sooriyakumaran | Shanmuganathan Sasikaran | Muthulingam Suntharalingam |
| --- | --- | --- |
| PRESIDENT/தலைவர் | SECRETARY/காரியதரசி | TREASURER/பொருளாளர் |







**"ரவி அண்ணா..." என நானும், "ரவி மாமா" என்று என் பிள்ளைகளும் பாசத்தோடு அழைக்கும் கணபதி இரவீந்திரன் அவர்களை வாழும் பொழுதே வாழ்த்தி மதிப்பளிக்கும் ஒரு பொன்னான பொழுதில் இந்த வாழ்த்தினை எங்கள் குடும்பத்தின் சார்பில் உளமார பதிவு செய்வதில் பெரும் மகிழ்ச்சி அடைகின்றேன்!**

அன்பும் திறனும் பண்பும் பயனும் கலைத்தாகமும் தமிழ்ப்பற்றும் என பல்கி பெருகும் பேராற்றலின் ஊற்றாக ஈழ தமிழ் மக்களிற்கு கிடைத்த மகத்தான பல்துறை கலைஞன்!

ஒரு ஒலிபரப்பாளனாக..
ஒரு ஒளிபரப்பாளனாக ..
ஒரு நிகழ்ச்சி தயாரிப்பாளனாக..
ஒரு பத்திரிகை ஆசிரியராக
ஒரு ஊடகவியலாளனாக...
ஒரு இதழ் ஆசிரியராக..
ஒரு எழுத்தாளனாக.
ஒரு ஓவியனாக..
ஒரு நாடக நடிகனாக..
ஒரு நகைசுவையாளனாக..
ஒரு திரைப்பட நடிகராக..
ஒரு மொழி பற்றாளனாக...
ஒரு தேசிய உணர்வாளனாக..
ஒரு அறிஞனாக..
ஒரு இயக்குனராக..
ஒரு பேச்சாளராக..

சொல்லிக்கொண்டே போகலாம்...

பல பரிமாணங்களோடு பல்துறை ஆற்றல் கொண்டவராக எம் மத்தியில் வாழ்கின்றார் இந்த அற்புத கலைஞன் என்ற பெருமையை விட

எவரையும் இனிமையான கனிந்த பேச்சால் கவரும் அன்பானவராக...

குழந்தைகளிடமோ மூத்தவர்களிடமோ அறிஞர்களிடமோ அறியாதவர்களிடமோ அவர்கள் மனதில் மேலோங்கி நிற்குமளவு உயர்ந்து நிற்கும் வண்ணம் பண்பாக பணிவாக மதித்து பேசும் பெருமகனாக...








தேசிய தலைவரையும், பெற்ற தாயையும் தனது உயிரில் சுமந்து உணர்வோடு தாயகத்திற்கும் தமிழுக்கும் முதலிடம் கொடுக்கும் நற்றமிழனாக.!

எல்லோரும் போற்றும் நல்ல மனிதராக வாழ்வதே மகத்தான சாதனை!

ரவி அண்ணாவால் தட்டி கொடுக்கப்பட்ட ஆற்றலில் வளர்ந்து சாதனைப்படைக்க ஊக்கம் கொடுக்கப்பட்ட குழந்தைகள் வரிசையில் கனடிய மண்ணில் என் மகள் திவ்வியா உடபட ஏராள மானோர் இன்று பலர் போற்ற வாழ்கின்றார்கள்.

அகவை 3ல் "ரவி மாமா, ரூபி மாமி" என அவர்கள் சுட்டு விரல் பிடித்து நாடகங்களில் என் மகள் திவ்வியா நடித்த காலங்களை நன்றியோடு பெருமையோடு மகிழ்வோடு நினைவு கூறுகின்றேன்.

இன்று சமூகத்தில் பெரும் சாதனையாளர்களாக வளர்ந்திருக்கும் இளையவர்கள் பலர் இவர்களால் ஊக்குவிக்கப்பட்டு வளர்க்கப்பட்டவர்களே.

அந்த வகையில் அற்புதமான மனிதரான ரவி அண்ணாவை தமிழ் நெஞ்சங்களின் சார்பிலும் என் குடும்பத்தின் சார்பிலும் போற்றி பாராட்டி வாழ்த்துகின்றேன்.

மறுபிறப்பெடுத்து நீங்கள் ஆற்றி வரும் தொண்டுகள் மேலும் பல ஆண்டுகள் தொடர நலத்தோடும் மகிழ்வோடும் நீடூழி வாழ்க!

வாழ்த்துக்கள் ரவி அண்ணா!

அதே போல் குடத்தில் இருந்த விளக்கை போன்ற ரவி அண்ணாவை குன்றில் ஏற்றி வைத்து உலகுக்கு அறிய செய்து பயனும் தர செய்யும் உற்ற உறவான ரூபி அக்காவுக்கும் வாழ்த்துக்கள்!

நினைவில் நிற்கும் நினைவுகளோடும்...
நெஞ்சம் மாற அன்போடும்...

வாழ்த்தி மகிழும்
இவள்...

**அன்பு சகோதரி**
**சிவவதனி பிரபாகரன்**



ஐம்பது வருடங்களாக தொடர்ந்து கலையுலகில் இயங்கிக்கொண்டிருப்பதென்பது எல்லோருக்குமே எளிதில் வாய்க்கப்பெறாத ஒன்று. அதுவும் யாழ்ப்பாணச்சூழலில், மிக இளவயதில் கலைத்துறையில் ஈடுபட்டு, அதை தொடர்ந்து செய்வதென்பது ஒரு சாதனைதான். அதை கலைவேந்தன் கணபதி இரவீந்திரன் செய்திருக்கிறார். எனக்குத் தெரிந்து ரொரன்ரோவில் கலைத்துறையில் அயராது உழைத்துக் கொண்டிருப்பவர்களில் கணபதி இரவீந்திரன் அவர்கள் முக்கியமானவர். பேச்சு, விவாதம், பட்டிமன்றம், நாடகம், சினிமா என்பவற்றோடு வானொலி, தொலைக்காட்சி ஊடகங்களில் அவரது ஈடுபாடும் பங்களிப்பும் முக்கிய மானவை. கலைத்துறையில் அவரது தீவிர ஈடுபாட்டுக்கு அவர் ஆண்டுதோறும் நடத்தும் நாடக விழாவே சான்று. கலைத்துறையில் மட்டுமல்லாது கல்வித்துறையிலும் தனது தேடலை விரிவுபடுத்தித் தனது தகைமைகளை உயர்த்திக் கொள்ள அவர் எடுத்திருந்த முயற்சிகள்பற்றியும் நான் அறிவேன். பழகுவதற்கு இனியவரான கணபதி இரவீந்திரன் அவர்கள் பூரண தேகாரோக்கியத்துடன், மனமகிழ்ச்சியோடு, நீண்டகாலம் தனது கலை மற்றும் சமூகப்பணிகளைத் தொடர்ந்து செய்வதற்கு வாய்ப்புகளும் சகலரது ஆசீர்வாதமும் கிடைக்கவேண்டுமென்று வாழ்த்துவதில் நான் மகிழ்ச்சி அடைகிறேன்.

P. விக்னேஸ்வரன் - ஊடகவியலாளர்

# வாழ்த்தி மகிழ்ந்திட...

அண்ணலுக்கு அகவை
ஆறு பத்து ஐந்தா?
இன்றும் ஆறு போல்
என்றும் புன்னகை
பொங்கி வழிந்தோடும்
அன்பின் நதி...

ஆரத்தழுவும்
கலையுணர்வு
உறவைப் பேணும்
உயருள்ளம்...

மாற்றம் தேடும்
மகத்துவமே
இகம் புகழும்
இன் தமிழ்
நேயன்...

பத்திரிகை வானொலி
நாடகம் கவிதை
திரைப்படம்
அத்தனையிலும்
நும் கலை வண்ணம்...

முந்து தமிழ்ப்
பற்றாளன்
எத்திசையும்
நின் புகழ் ஓங்கிடும்...

உயர் கலை
உலகின்
சுடர் ஒளிச்
சேர்க்கையே
உயர்ந்தோங்கும்
நின் புகழ்...

வாழ்வதனைக்
கலைக்களித்து
நோய் பிணி
நோக்காது
அல் பகல்
அயரா அர்ப்பணிப்பில்
அன்னைத் தமிழை
மகிழ்ந்தேத்திப்
புகழேந்தேற்றி
நிறைந்திருப்பீர்...

இந்தமிழ் பைந்தமிழ்
வையகம் பரவிட
தம் பணி
தொடர்ந்திட
மென் குரல்
மேதினி கேட்டே
மகிழ்ந்திட
புவிதனில்
நும் புகழ்
ஓங்கிட
பல்லாண்டு
வாழ்கவென
வாழ்த்தி
மகிழ்ந்திடுவோம்...!

**- வேந்தனார் -**



# சாதனையாளர்



ஐம்பதாவது அகவை காணும் நண்பரே,
வழிபடு தெய்வம் உங்களை புறம் நின்று காத்திருக்க
நீங்களும் உங்கள் குடியும் வழையடி வழையென
வழி வழியாக சிறந்து பொலிவுற வாழ்க!

திரு கணபதிரவீந்திரன் அவர்களை, கடந்த இருபத்தைந்து வருடங்களுக்கு மேலாக நன்கு அறிவேன். அவர் ஒரு பல துறை சார்ந்த வல்லுனர். அதற்கும் மேலாக, அவர் முன்னெடுக்கும் எந்த விடயத்தின் மீதும், விருப்பம், நம்பிக்கை, விடாமுயற்சி (அர்ப்பணிப்பு), திறமை என்பன ஒருங்கிணைக்கப்பெற்றவர். அதனால், அவர் ஒரு சாதனையாளராகத் திகழ்கிறார்.

அன்பு, பணிவு, நகைச்சுவை, எளிமை என்பன அவரிடம் இயல்பாக அமைந்த பண்புகள் - வல்லமையே நல்லது என்ற பார்வையில் இருந்து விலகி - நல்லதுதான் வலிமை - என்ற பார்வை கொண்டவர். அதனால், வலிமை கொண்டோர் என்பதைப் பார்க்காது, உண்மையை, நல்லதை எடுத்துக்கூற தயங்காத, துணிவாளர், சமூக அக்கறையாளர். இத்தகைய குணாம்சம் கொண்ட ஒரு பல்துறை நாயகன் இவர் சிறந்த நலத்துடன் வாழ வேண்டும், உயர் வேண்டும்.

சமூகத்தில் நல்லதைக் கூறித் தீயதைக் கண்டித்து வாழ்வோரைப் பற்றிய கண்ணதாசனின் கூற்றுக் கவனிக்கத்தக்கது. போற்றுவார் போற்றட்டும் புழுதி வாரித் தூற்றுவார் தூற்றட்டும், தொடர்ந்து செல்வேன்.

ஏற்றதொரு கருத்தை எனதுள்ளம் ஏற்றால் எடுத்துரைப்பேன். எவர் வரினும் நில்லேன், அஞ்சேன் என்றார்.

சமூக அக்கறை கொண்டவர்கள் எப்படி கருத்துக்களை முன்வைப்பார்கள் என்பதைப் பலதடவை ரவியிடம் கண்டுள்ளேன்.

மனச்சாட்சி உள்ள மனிதன் தடங்கல்களில் தடுக்கி விடுவதில்லை. வேற்றுமைகளால் சோர்வதில்லை. மாறாக, இவை அவனைத் தூண்டி விடுகின்றன. ஓர் ஆன்மா இல்லாத மனிதன் மட்டுமே, இவற்றின் கனத்தையும் தடையையும் கண்டு துவண்டு விடுகிறான்.

நிறைவாக, உயர்ந்து வாழ, மேலும் சிறந்து வாழ, நலத்துடன் வாழ எமது வாழ்த்துகள். நன்றி, வணக்கம்.

**சு.இராசரத்தினம்**
**தலைவர், கனடா தமிழ்ச்சங்கம்**



# கலை காக்கப்பிறந்த கலைவேந்தனுக்கு வாழ்த்துக்கள்!

**- ரூபி யோகதாசன் -**

"மாபெரும் சபைகளில் நீ நடந்தால் உனக்கு மாலைகள் விழவேண்டும். ஒரு மாற்றுக் குறையாத மன்னவன் இவன் என்று போற்றிப்புகழவேண்டும்" என்ற பாடல்வரிகளுக்கு மிகப் பொருத்தமானவர் கலைவேந்தன் கணபதி ரவீந்திரன். எனக்கு இவரிடம் நிறைய விடயங்கள் மிகவும் பிடிக்கும். தன் தாய் மீது எத்தனை பாசமும் நேசமும் உள்ளதோ அதே அளவு மற்றைய தாய்மார்கள் மீதும் அளவு கடந்த பாசமுடையவர். இவரது வாழ்க்கை ஒரு திறந்த புத்தகம் இந்த 50 ஆண்டுகால கலை வாழ்க்கையில் எத்தனையோ சாதனைகளை அவர் செய்திருக்கின்றார். அதற்காக பெருமையோ பெருமிதமோ கொள்ளாத ஓர் எளிமையான உண்மையான கலைஞன் திறமை யாரிடமிருக்கிறதோ அவர்கள் குழந்தைகலானாலும் சரி பெரியவர்கள் ஆனாலும் சரி ஓடிச்சென்று தட்டிக் கொடுத்துப் பாராட்டுவார். தலைக் கணம் இல்லாத ஒரு தரமான கலைஞன் இவர். கனடாவில் கிட்டத் தட்ட இரண்டாயிரத்தி ஐந்நூறு நாடகங்களுக்கு மேல் நடித்திருக்கிறார் இது தவிர ஏனைய இயக்குனர்களின் நாடகங்களிலும் பல திரை படங்களிலும் நடித்திருக் கின்றார். எனக்கு ஒரே ஒரு பெருமையும் மகிழ்ச்சியும் ஆரம்பகால இவரது கலைப் பயணத்தில் நானும் இவரோடு கைகோர்த்துக் கொண்டு பயணித்திருக்கிறேன் என்பதுதான். கனடாவில் முதல் தமிழ் பெண் தயாரிப்பாளராக நான் தயாரித்த "கதிரொளி", "கனேடியன்" என்ற இரண்டு படங்களிலும் நடித்து உதவி இயக்குனராகவும் பணியாற்றியுள்ளார்.

இவரது இன்னுமொரு சாதனையாக வானொலித் துறையில் கீதவாணி வானொலியில் இணைந்து சகோதரி மீராவின் முயற்சியினால் 1998 ஆண்டு மொன்றியால் வல்மொறின் ஸ்ரீ சுப்பிரமணிய ஐயப்பன் இந்து ஆலயத்தின் தேர்த்திருவிழாவை நேரடி ஒலி பரப்பு செய்வதற்காக சென்றார் இந்தாண்டு அவரது இந்தப்பணி இருபதாவது ஆண்டாகிறது இந்தச் சாதனையை கனடாவில் எவருமே செய்ததாக எனக்குத் தெரியவில்லை .இவரது இன்னுமொரு இமாலய சாதனையாக நான் பார்ப்பது நாங்கள் இருவரும் சேர்ந்து தமிழ் வண் தொலைக்காட்சியில் கிட்டத் தட்ட எட்டு ஆண்டுகளாக "இது தாண்டா இம்சை" என்ற நாடகத்தை பிரதி ஞாயிற்றுக்கிழமைகளில் மாலை 5.30க்கு நேரடிக்காட்சியாக நடிப்போம். ஒரு நாள் என்னால் அதில் கலந்துகொள்ள முடியவில்லை. அன்று எங்கள் செல்லப்பிராணியான "ரிம்பிற்" உடன் அரைமணிநேரம் நாடகம் நடித்துள்ளார். அதே போன்று நோர்த்யோர்க் திரையரங்கள் ஆரம்பித்த அந்த முதல் நாளில் ஐவரும் நானும் ரகுநாத் அர்ச்சனா ஆகியோரோடு எங்கள் செல்லப் பிராணியும் நடித்திருந்தார்.

இத்தகைய ஆற்றல் மிகுந்த கலைவேந்தன் கணபதி ரவீந்திரன் திடீர் என நோய் வாய்ப்பட்டு அவரது இரு சிறுநீரகங்களும் செயல் இழந்த போது இத்தகைய கலைஞனின் பணி எமது இனத்திற்குத் தேவை என்று கருதி இந்தக் கலைஞன் இன்னும் பல்லாண்டு வாழ வேண்டும் என்னும் ஒரே எண்ணத்தில்த்தான் நானாக முன்வந்து எனது சிறுநீரகம் ஒன்றைத் தந்தேன் இன்று எழுத்துத்துறையிலும் கலைத்துறையிலும் ஐம்பதாவது ஆண்டு பொன்விழாவையும் அறுபத்தியைந்தாவது அகவை விழாவையும் அவர் கொண்டாடுகிறார். இதைப்பார்க்கின்ற போது என் தானம் வீண் போக வில்லை என்ற எண்ணத்தில் மகிழ்ச்சியின் உச்சியில் உள்ளேன் இன்னும் பல ஆண்டுகள் மொழிக்கும் மக்களுக்கும் இனத்திற்கும் பணியாற்ற வேண்டும். அதற்கு எல்லாம் வல்ல இறையருளின் அருளும் உங்கள் அனைவரது ஆசியும் வாழ்த்துக்களும் இந்தக்கலைஞனுக்கு என்றென்று கூடவே இருக்கவேண்டு மென்று பிரார்த்திக்கிறேன்.

# நாடக எழுத்து கலைப்பணிசமூகப்பணியில் பிரவேசித்து இன்று ஐம்பது ஆண்டுகளை அடைந்திடும் கலைவேந்தனை வாழ்த்தி மகிழ்கிறோம்

செந்தமிழ்த்தாய் உவந்துபெற்ற செல்வத்திருமகன்
நாடறிந்த நல்லதோர் நம் உறவாம் கணபதி ரவீந்திரன்
சிந்தை பல கொண்டு சேவைகள் ஆற்றும் திருமகன்
சீரியகொள்கை நெஞ்சம் கொண்ட செந்தமிழன்
யாழ் ஈழநாடு இனம் காட்டிய இணையிலா எழுத்தாளன்
வேருக்கு வேரென யாவர்க்கும் தோள் கொடுப்பான்
தருமத்தை வளர்த்திடும் அளவற்ற அன்பாளன்
பாங்குறும் வானொலி தொலைக்காட்சி இவர் படைப்பால்

தேர்வட நெஞ்சுரத்தோன் எங்கள் கலைவேந்தன்
செவியில் இன்பம் சேர்த்திடும் வல்லமை கொண்டு
சொல்லில் ஆளுமை கொண்டவரும் இவரன்றோ
புகழ் துலங்க நின்றும் எதிலும் தலைக்கனம் கொள்ளார்
செறிவுற செந்தமிழ் கனேடிய மண்ணில் சீரிய
பணிகள் பலவும் செய் சிறந்த பண்பாளர்
அகத்தில் என்றும் இளமை அறிவில் முதுமை
அகவை அறுபத்தைந்து இவர்அழகு முகத்தில்
முழுமை காட்டி நின்றிடும் முதிர்ந்த பண்பு
பெற்ற அன்னை பெரிதுவக்கும் அருமை மைந்தனின்
பெரும் புகழை கண்டு மனம்குளிர எம்மிடம் இல்லையே
அன்னையின் கனவை நனவாக்கி அகில உலகெங்கும்
அனைவராலும் அறியப்பட்டு பேசப்படும் அருமருந்தாம்
அண்ணல் ரவீந்திரன் ஆண்டு நூறு கடந்து வாழ்கவென
ஆண்டவனை வேண்டி பணி தொடர வாழ்த்தி மகிழ்கிறோம்
வாழ்க வளமுடன் வாழிய நூறு!

அன்புடன் வாழ்த்தி மகிழும்
**கனடா இலங்கை முன்னாள் வர்த்தகசங்கம்**



அறுபத்தைந்து அகவையில் கலையுலகில் காலடி வைத்து
ஐம்பது ஆண்டுகளை பூர்த்தி செய்து மகிழும்
கலைவேந்தன் கணபதி ரவீந்திரனுக்கு
நண்பன் எழுதும்

# தங்கமடல்

**கலையுலகில் பொன்விழா காணும் நண்பனே!**

ஊருக்குள்ளே கண்டெடுத்த கலைமுத்து
தேருக்குள்ளே செதுக்கிய சிற்பக்கலை
வேருக்குள்ளே விளைந்த கலையை-இன்று
பாருக்குள்ளே கோபுரம் கட்டிய வேந்தனிவன்

நூறுக்குள்ளே ஆண்டுகள் உனக்கில்லை- பல
நூறாண்டுகள் கணபதி ரவீந்திரனுக்காகக் காத்திருக்கு
ஆறாக தமிழ்க் கலைகள் பாரெங்கும் பாயவேண்டும்
சான்றாக கணபதி ரவீந்திரன் என்றும் வாழவேண்டும்.

ஞானபாஸ்கரோதய ஆண்டு விழாமேடைகளிலும்
கட்டைப்பிராய் கலைமணி சனசமூக நிலையத்திலும்
இலங்கை நாயகி அம்மன் வீதியிலும்- அன்று
கலக்கிய காலங்கள் இன்னும் நினைவிருக்கிறது.

ஐம்பதாண்டுகள் நாடகம் நகைச்சுவை எனவும்
தம்பலத்தோடு கவிதை சிறுகதை அறிவிப்புக்களும்
நம்பக்க வால்மொறின் திருவிழாவில் என்னோடு
கம்பன்போல கதைகதையாக வர்ணனை செய்வாயே

அறுபத்தைந்து அகவையில் தமிழ்மக்களின் மனங்களில்
ஆழமாக வேரூண்டி மிகப்பெரிய புகழ்தருவானாய் நண்பனே!
கருவாகும்போதே கலைக்காக பிறந்தாய் கணபதி ரவீந்திரனே
உருவான உடலில் தமிழ்மொழி தான்வாழ நீவாழ்க நண்பா!

இப்படிக்கு
A.M.r முத்தையா ராஜகோபால் குடும்பம்
உரிமையாளர் AMR பல்பொருள் அங்காடி


AMR Inc Fruiterie

FRUITERIE A.M.R

1150 RUE DICARIE, SAINT-LAURENT, QC H4L 3N1

தமிழ் வாழ்க!

# தமிழாழி இணையம்

# ASSOCIATION DE THAMILAALI

# THAMILAALI ASSOCIATION

கனடா CANADA

2017 ம் ஆண்டு தமிழாழி விருதைப் பெற்று
**தமிழாழி கணபதி ரவீந்திரன்** என்னும்
சிறப்புப்பெயரை கலையுலகில் பொறித்தார்

தமிழாழிக் கடலலைக்குள் படகோடும் ஈழத்தில்
தமிழர்தேச யாழ்ப்பாணம் நல்லூர்வடக்கே வாழ்ந்த
தம்பதிகள் கணபதிப் பிள்ளை நல்லம்மாக்கு
தங்கமகனாகப் பிறந்த ரவீந்திரனுக்கு - இன்று
தங்கவிழா தமிழ்பொங்கும் எங்கள் விழா.

சின்ன வயதில் சிந்தித்து சிறுகதை ஓவியத்தோடு
சின்ன கையால் ஏடெடுத்து நான்கவிதை எழுதவேண்டுமெனச்
பின்னிய வரிகளால் ஈழநாட்டு பத்திரிகைக்கு நிருபராகி
எண்ணிய எழுத்துக்களை பதிக்க உதவியாசிரியரானார்

அரியாலையில் அடியெடுத்து செங்குத்தாவில் செதுக்கிய
அரியாசனக் கல்வியால் சரியாசனம் பெற்று யாழில்
அரியதோர் கல்வி நிலையத்தை அமைத்து வாழ்ந்தபோது
அரிமா சங்கத்தில் மல்வின் ஓவியத்தையும் வரைந்தார்.

இவரது முதல்நாடகமோ ஓட்டை நாடகம் காண்பீர்
இவர் கனடாவில் நூற்றிப் பதினைந்து மேடையேறினாலும்
இன்னும் எமக்கு சிதம்பர சக்கரம் விடிவெள்ளிதான்
இன்று ஓரோவியம் காவிமாகிய கலைவேந்தன் காண்பீர்

உதயன் பத்திரிகையில் பல பயணக் கட்டுரைகள்
ஊடகத்துறையில் அறிவிப்பு பட்டிமன்றம் நகைச்சுவை
உழைப்பின் ஊதியம் கலைவேந்தன் கலைகுருசே இரண்டாலும்
உயர்ந்த கதிரொளி நாயகனுக்கு தமிழாழி விருதும் முடிசூடியதே!

தமிழ்க்கலையின் குருசே! தமிழ்க்கலையின் வேந்தனே!!
தமிழாழியைக் கடந்து கொடி நாட்டிய கொற்றவனே வாழ்க!!!

திருமதி கு. யோகராசா
பொதுச்செயலாளர்

சகித் தேவமனோகரன்
உபதலைவர்

தமிழ்மணி க. உயிரவன்
தலைவர்

2018-04-22

Thamilaali தமிழாழி

# கலையின் காவலன்



ரவி அண்ணர் அவர்கள் ஒரு கலைஞனா?
ரவி அண்ணன் ஒரு செய்தியாளன்
ரவி அண்ணன் ஒரு நகைச்சுவை நடிகன்
ரவி அண்ணன் ஒரு குணச்சித்திர நடிகன்
ரவி அண்ணன் ஒரு திரைப்பட நடிகன்
ரவி அண்ணன் ஒரு நாடக நடிகன்
ரவி அண்ணன் ஒரு கவிஞன்
ரவி அண்ணன் ஒரு எழுத்தாளன்
ரவி அண்ணன் ஒரு பத்திரிகை ஆசிரியர்
ரவி அண்ணன் ஒரு வானொலி அறிவிப்பாளன்
ரவி அண்ணன் ஒரு நேரடி அஞ்சல்காரன்
ரவி அண்ணன் ஒரு நிகழ்ச்சித் தொகுப்பாளன்
ரவி அண்ணன் ஒரு நிகழ்ச்சி அறிவிப்பாளன்

பன்முகம் கொண்டவன் நிச்சயம் ஒரு கலைஞனே.
தாய், தமிழ், தான் பிறந்தமண் இவற்றை மனதார நேசிக்கும்
ரவி அண்ணன் ஒரு சர்வகலா வல்லவன்.
நவரசநாயகன் கமலஹாசன் என்கிறோம். இத்தனையும்
தன்னகத்தே கொண்ட ரவி அண்ணாவை எப்படிப் பார்க்கிறோம்.

இவர் எங்களில் ஒருவராய் இருப்பதால்
இனிய உள்ளம் கொண்டவராய் இருப்பதினால்
இத்தனைக்கும் இன்றும் எம்மோடு பயனிப்பதினால்
இவரா... என்று கடந்து செல்கின்றோம்.

இத்தனை திறமைகளையும் கொண்ட ஒருவர் இன்று எம்மோடு வாழுகின்றார்.
தனது பதினைந்து வயதில் ஆரம்பித்த கலைப்பயணம் இன்று ஐம்பதை
எட்டி நிற்கின்றது. இந்தக் கலைஞனைப் பாராட்ட வார்த்தைகள்
எதுவுமில்லை. ஆனாலும் பாராட்டுக்காய் ஏங்கி நிற்கின்ற
கலைஞனை வாழும் போது வாழ்த்துவோம்.

உங்கள் கலைப்பயணமும் உங்கள் வாழ்வும்
இன்னும் பல்லாண்டு புதுப்பொழிவோடு வாழவாழ்த்துகிறோம்.

**உங்களை மனதார நேசிக்கும்**
**சோதி, செல்வி**

# அம்மா உன்னோடு ஒருநிமிடம்.........



கருவறையில் எனை உற்பவித்தாய்
காசினியில் எனை தோற்றுவித்தாய்
உதிரத்தைப் பாலாக்கி உணவளித்தாய்
தமிழ் உணர்வையும் அதனோடு சேர்த்தளித்தாய் அம்மா
எப்போதும் உன்விருப்பமாக ஒன்றைச்சொல்வாய் அம்மா
நான் வீதியால் செல்லும் பொது என்னை பார்க்கும் சிலர்
இவன் சிறந்த ஓவியன் என்று, இவன் சிறந்த கவிஞன் என்று
இவன் சிறந்த நடிகன் என்று, இவன் சிறந்த பேச்சாளன் என்று
சிறந்த பத்திரிகையாளன் என்று சொல்லவேண்டு என்று
அடிக்கடி சொல்லுவாயே... உன் விருப்பத்திற்கு மேலாக ஒரு படி
சென்று இன்று ஒரு வானொலிக்கலைஞனாக வலம் வருகிறேனே...
அம்மா நீ ஆசைப்பட்ட எல்லாவற்றையும் இன்று நான் ஓரளவு
செய்திருக்கிறேன் அம்மா ஆனால் நீ நான் ஆசைப்பட்டதை
செய்யவில்லையே எனக்குக்கிடைக்கும் இந்தப்பெருமைகளை
புகழை வாழ்த்துக்களை பார்க்கவில்லையே அம்மா
என்னை செதுக்கிய சிற்பியே உன் மகனுக்கு இன்று கிடைக்கும்
புகழும் பெருமைகளும் நீ இட்ட பிச்சையம்மா இந்த வரிகளை
நான் எழுதும்போது 20.04.18 வெள்ளிக்கிழமை அதிகாலை
3.34 கண்ணிடரண்டும் நீர் சொரிய கைகள் நடுங்க என் கண்ணீரை
உன் கமலா மலர்ப்பாதங்களுக்கு காணிக்கையாக்குகிறேன்.
உன் விருப்பப்படி எழுத்துத்துறையிலும் கலைத்துறையிலும்
ஐம்பது ஆண்டுகள் கடக்கிறதம்மா அகவை இன்றெனக்கு
அறுபத்தியைந்தாகிறதாம் நண்பர்கள் சொல்கிறார்கள் நீ மட்டும்
உயிரோடு இருந்திருந்தால் இன்றும் நான் குழந்தைதான்
எனக்கு பொன்விழா காணும் உற்ற நண்பர்கள் ஒரு குழு அமைத்து
நண்பர் கோபாலகிருஸ்ணன் (அம்மா பவுன் புரோக்கர்ஸ் உரிமையாளர்)
தலைமையில் எழு வர்ணங்கள் போலும்
ஏழுபேர் இவ்விழாவை சிறப்பாக நடத்துகிறார்கள் அம்மா...
இந்த வேளையில் விழாக்குழுவினர்க்கும்,
உணவளித்த என் உடன் பிறவா தம்பி ரூபனுக்கும் (நந்தா உணவகம்),
மண்டபம் தந்துதவிய வசந்த் தீபா தம்பதிகளுக்கும்,
தங்கள் இசையால் விழாவிற்கு இனிமைசேர்த்த நட்சத்திரா இசைக்குழுவுக்கும்,
ஒலி ஒளி அமைப்புச் செய்த தம்பி யதுவிற்கும்,
இம்மலரை அழகுற வடிவமைத்த தம்பி ரிஷிஷ்காந்திற்கும் **(East FM),**
மலருக்கு வாழ்த்துத்தந்த கனேடியப் பிரதமர் உட்பட அனைத்து
நல் நெஞ்சங்கள், மலரை அழகுற அச்சடித்துத் தந்த **JJ Printers**
உரிமையாளர்கள் திரு.திருமதி ஜெயானந்தஜோதி செல்வி தம்பதிகளுக்கும்
விழாவை சிறப்பிக்க வருகை தந்த அனைத்து நல்லுலங்களுக்கும்
என் சிரம் தாழ்ந்த நன்றியை தெரிவித்துக்கொள்கிறேன்...
எல்லாவற்றிற்கும் மேலாக இன்று எனது பொன்விழாவைக் காண்பதற்கு
தன் சிறுநீரகத்தை தானமாகத்தந்து எனக்கு வாழ்வளித்த
ரூபியின் பாதத்தை சிரம்தாழ்த்தி வணங்குகிறேன்.
இப்போது உன் மனம் மகிழ்ந்திருக்கும் அம்மா...!

**உன் கடைக்குட்டி - கணபதி ரவீந்திரன்**


50
22.04.2018


50
22.04.2018
கலைவேந்தன் பொன்விழாவை
சிறப்பித்த அனைவருக்கும்
நன்றிகள்...
JJ Print 416.298.9322